# அருள் ஒளி

நல்லூர் சிவன்கோவில்
மகாகும்பாபிஷேகம்
08.06.2006



வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

வைகாசி
மாத
இதழ்

தெல்லிப்பழை
இலங்கை
2006

மலர்
46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு க. சிவபாலன் அவர்கள்

2006 விய வருடம் வைகாசி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை, பதிவு இல. QD/74/NEWS/2005

மலர் 46


## சைவத்தமிழர்களின் அரும்பெருஞ் சொத்து பரமேஸ்வராக் கல்லூரி

யாழ் குடாநாட்டில் சைவத் தமிழர்களின் உன்னத மறுமலர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட பெருங்கல்லூரிகளில் ஒன்று பரமேஸ்வராக் கல்லூரி என்றால் மிகையாகாது. சைவப்பெரியார் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் நீண்ட தூரநோக்குடன் உருவாக்கிய கல்லூரிகளே மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியும் ஆகும். இங்கிலாந்திலுள்ள பல்கலைக் கழகங்களையும், இந்தியாவிலுள்ள உயர் கல்லூரிகளையும் தன் அகத்தில் உள் வாங்கி இராமநாத வள்ளலால் உருவாக்கப்பட்டவையே இக்கல்லூரிகளாகும். பரமேஸ்வராக் கல்லூரி பல வரலாறுகளையும் வாழ்வித்த உயர் கல்விப்பீடமாகும். இராமநாத வள்ளல், இவரது பாரியார் லேடி லீலாவதி இராமநாதன் அம்மையார், ஆகியோர் அல்லும் பகலும் பெரும் கல்விச்சேவையை நட்டி வளர்த்த கல்லூரிகளின் வரலாறு இன்றைய தலைமுறை அறிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போய்விட்டது. சைவமக்களின் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானின் பெயரில் உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி பலநூறு சைவத்தமிழ் அறிஞர்களை இம்மண்ணுக்கு தோற்றுவித்தது. விசாலமான விருந்திச்சாலை, பரமேஸ்வரன் கோயில், பழமுதிர்சோலை போல் பசுமைநிறைந்த மரஞ்செடிகள், மாடி கட்டிட மண்டபம், மிகப்பெரிய விளையாட்டு மைதானம் என்பனவற்றால் பரமேஸ்வராக் கல்லூரி வளாகம் பரிணமித்தது. பொன் பூச்சொரியும் கொன்றை மரங்கள் கல்லூரி முழுவதும் மஞ்சள் கம்பளமாக விரிந்து வரவேற்கும். இந்தியாவில் இருந்து வருகை தந்த பேரறிஞர்கள் பேராசான்களாக கல்விப் பணியாற்றினர். ஆங்கிலம், வடமொழி, தமிழ், பாளி, கர்நாடக சங்கீதம் என விரிந்த கல்வியாளர்களான வித்துவான்களால் மாணவர்களுக்கு புகட்டப்பட்டது. இராமநாத வள்ளலின் மறைவுக்குப் பின்பும் அவரது மருகராகிய அறிஞர் செனற்றர். சு.நடேசபிள்ளை அவர்களால் பார்போற்றும் கல்லூரியாக நிர்வகிக்கப்பட்டது. பேரறிஞர்கள் ஒன்று கூடி தமிழ் முழக்கம் செய்வதற்கு பரமேஸ்வராக் கல்லூரி அரங்கம் அன்று வாய்ப்பு வழங்கியது. ஈழத்து அறிஞர்களும் இந்தியத் தமிழ் அறிஞர்களும் தமிழ் முழக்கம் செய்ய, பல்லாயிரம் மக்கள் பனைகள் நட்டு அலங்கரிக்கப்பட்ட விழாக்கொட்டகைகளில் தமிழ் அருந்தியசுவையை இலங்கைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் விழா மலர் (1951) சான்று கூறுகின்றது. விளையாட்டுத் துறையிலும் பரமேஸ்வராக் கல்லூரி செய்த சாதனைகள் மறக்க இயலாதவை. ஆண்டுதோறும் சைவ சமய குரவர்களின் குருபூசை, வள்ளலின் நினைவு நாள் போன்றன பரமேஸ்வராக் கல்லூரியில் பெருவிழாக்களாக நடைபெறும். இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள அமரர் இராமநாதவள்ளலின் சமாதியின் மேல் எழுந்த இராமநாதேஸ்வரம் சிவன் திருக்கோயிலை நோக்கி பரமேஸ்வராக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் வள்ளலின் திரு உருவப்படத்தோடு ஊர்வலமாக பெருந்தெருவால் ஆண்டுதோறும் வருவார்கள். இவை எல்லாமே இன்று கனவாகிப் போய்விட்டது. யாழ்ப்பாணத்து மக்களுக்கு பல்கலைக்கழகம் வேண்டுமென்ற குரல் வலுப்பெற்ற வேளை பலரது கண்ணும் பரமேஸ்வராவை நோக்கியது. 1974ஆம் ஆண்டுடன் பரமேஸ்வராக் கல்லூரியின் சரித்திரம் மௌனமாகிறது. கல்லூரி மாணவர்கள் பல பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டனர். கல்லூரியின் மிகப் பெரிய நூல்நிலையம், விடுதிச்சாலைத் தளபாடம் எல்லாமே கல்வித் திணைக்களத்தால் இடம் மாற்றப்பட்டது. பல்கலைக்கழகம் உருவானதை பலரும் வரவேற்றபோதிலும் பரமேஸ்வராக் கல்லூரி மூடப்பட்டதையிட்டு பலரும் மனவேதனையும் அடைந்தனர். பல்கலைக்கழகப் பாவனைக்காக வட மிஷனரிமாரின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சமகாலத்தில் அரசினால் சுவீகரிக்கப்பட்டது. மிஷனரிச் சமூகம் கொதித்தெழுந்து நட்டஈடும் பெற்றுத் தம் கல்விச்சாலையை மீட்டெடுத்தது. ஆனால், சைவமக்களோ பரமேஸ்வராக் கல்லூரியை மீள உருவாக்குவதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. பரமேஸ்வராக் கல்லூரி அபிமானிகளும் அரசியல் செல்வாக்குகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அமைதியாக இருந்தனர். இந்நிலையில் இராமநாதப்பெரு வள்ளலின் பெருஞ்சொத்தாகிய இராமநாதன் கல்லூரியின் பெரும்பாகம் தற்போது பல்கலைக்கழகத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு கல்வித் திணைக்களமும் ஒரு பகுதியை சுவீகரித்துக் கொண்டது. சைவமக்களின் எதிர்காலச் சுபிட்சத்திற்காக திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இவ்விரு கல்லூரிகளிலும் ஆசிரிய கலாசாலை, பண்டிதர் பட்டப்படிப்புக் கலாசாலை, இசைக் கல்லூரி என சைவப்பாரம் பரியத்துக்கு உட்பட்டு கல்வி வழங்கல் விரிவாக்கப்பட்டு இருந்தது. இவை யாவும் இன்று முடங்கி விட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகி முப்பது ஆண்டுகள் கடந்த நிலையில் ஒரு செய்தி பரவலாகப் பத்திரிகைகளில் அண்மையில் வெளிவந்துள்ளது. பரமேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர்கள் கொழும்பில் ஒன்றுகூடி கல்லூரியை மீள உருவாக்குதல் தொடர்பாக ஆராய்ந்துள்ளதாக அச்செய்தி வெளிவந்தது. கல்லூரியை மீள உருவாக்குவதற்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டது. காலம் தாழ்த்தியேனும் பரமேஸ்வராக் கல்லூரி பற்றிய ஒரு சிந்தனை வலுப்பெற்று வருவது வரவேற்கத்தக்கது. ஒரு நிறுவனத்தை மூடுவது சுலபம். உருவாக்குவது என்பது இலகுவான காரியமல்ல. எதுவானாலும் சைவமக்கள் பல்வேறு குறிக்கோள்களுடன் உருவாக்கப்பட்ட கல்லூரிகளை காப்பாற்ற வேண்டியது அவசியமாகும். பரமேஸ்வராக் கல்லூரியை மீளவும் பெற நாமும் வரவேற்கிறோம்.

-ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரங்களின் பண்புகளைத் தெளிந்து மனிதர்களாக வாழ்வோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

நாம் வாழுகின்ற இந்தப் பூமியில் காணப்படுகின்ற தாவரங்களும், சங்கமித்துக்களும், தத்தம் நிலையில் உலக மாந்தர்களுக்கு நல்ல படிப்பினைகளையும், வாழும் முறைகள், நெறிகளையும் கற்பித்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் மனிதர்கள் தான் அத்தகைய நல்ல அம்சங்களைக் கற்க மறுக்கிறார்கள். பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணர் கூறியது போன்று, அவ்வாறு கற்க மறுப்பவர்கள் உண்மையில் நல்லபடி வாழமறுப்பவர்கள் ஆகிவிடுகின்றார்கள். நல்லபடி ஒழுங்காக வாழ மறுப்பவர்களின் வாழ்வு, இதமாகவும், இனிமையாகவும், இன்பமாகவும் அமைவதில்லை என்பது வெள்ளிடை மலை போன்று துலக்கமாகத் தெரிகின்றது.

தாவரங்களைப் பாருங்கள். அவை அசையாப் பொருட்கள். ஓரிடத்திலேயே நிலைத்து நிற்பவை. அவை அவ்வாறு தரித்து நிற்கின்ற போதும், அவற்றுக்குத் தேவையான நீர், உணவு என்பன யாவும் அவை இருக்குமிடம் தேடி வந்து சேர்கின்றன. உணவையோ,நீரையோ, வேறுதேவையின் நிமிர்த்தமோ, அலைந்து திரியாத நிலை தாவரங்களுடன் காணப்படுகின்றது. தாவரங்கள் என்றாலே அசையாதன என்பதுதான் பொருள். மனிதர்கள் அசையும் பொருட் தொகுதிக்குள் வருகின்றனர். சங்கமித்துக்கள் அசைவன.

மனிதர்கள் உணவு, நீர், மற்றும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குச் சிறிதளவு அசைந்தால் போதுமானது. ஆனால் மனிதர்கள் அத்துடன் திருப்தி கொள்வதில்லை. அளவற்ற ஆசைகள், அவாக்களினால் உந்தப்பட்ட மனிதர்கள் அசைவதுடன் நின்றுவிடுவதில்லை. மனிதர்கள் ஓய்வு ஒழிச்சல் இன்றி உலகமெலாம் அலைந்து திரிகின்றார்கள். அலைச்சல், உலைச்சல், உளைச்சல் எல்லாமே மனிதர்களைப் பற்றிக் கொள்கின்றன. பஞ்சாய்ப் பறக்கின்றார்கள் அல்ல, அல்ல, வாயுவேகம், மனோவேகத்தில் அகிலமெலாம் சுற்றிவருகின்றார்கள். மனிதன் தனது ஆற்றலினால், உலகினைச் சுருங்கவைத்து விட்டான். அது மகத்தான சாதனை. ஆனால், தன் உள்ளத்தில் கொழுந்து விட்டு எழும் ஆசைகளை அவனால் சுருக்கவோ, கருக்கவோ முடியவில்லையே. மனிதனுக்கு இத்துணை பெரிய ஆற்றல் இருந்தும், அதனால் என்ன பயன்? எல்லாம் பெற்றுக் கொள்ளக் கூடியவனாக உள்ளான்- நிம்மதியையும், மன அமைதியையும் தவிர, தனது அளப்பரிய ஆற்றல் கொண்டு தனக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற மன அமைதியையும், நிம்மதியையும் தேடிக்கொள்ள முடியாமல் இருப்பதிலிருந்து மனிதனிடம் ஆற்றாமையும் உள்ளது என்பது புலனாகின்றது. அறிவோடு அறியாமையும்: ஆற்றலோடு ஆற்றாமையும் சேர்ந்து காணப்படுபவன் மனிதன். ஆனால், அறியாமையையும்,ஆற்றாமையையும் அகற்றி, அறிவையும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ளும் இயல்பினையும் கொண்டவன் மனிதன் என்பதையும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். இதற்கு மனிதனின் மனம் தான் முக்கியம். மனத்தூய்மை ஏற்பட்டு விட்டால் நல்லன வெல்லாம் எய்தப்பட்டு விடும் என்பது உறுதி. மனம் உள்ளவன் மனிதன். மனத்தூய்மை பெற்றவன் தான் நிறைமனிதன் ஆகின்றான் அப்போதுதான் அமைதியும், நிம்மதியும் கிட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்கள் ஓரிடத்தில் நகர்வு இன்றி நிற்கின்றன. எனினும், அவை செழிப்பும், பசுமையும், வாளிப்பும் நிறைந்து காணப்படுகின்றனவே. அவை பூத்துக் குலுங்கி நிற்கும் போது எழிலும், அழகும் தோன்றுகின்றனவே. அவை காய்த்துக் கனிகளைப் பிறருக்கு ஈவதில் எத்தனை மலர்ச்சியும், மகிழ்ச்சியும் கொள்கின்றன. தாம் ஈன்ற பூக்கள், காய்கள், கனிகள் ஒன்றையாவது தமக்கென, எப்போதாவது, வைத்துக் கொள்கின்றனவா? அவை தமது செல்வங்களைப் புதைத்து வைப்பதோ, பதுக்கி வைப்பதோ, கிடையாது. பிறரினது செல்வங்களை அபகரிப்பதும் கிடையாது. நிலத்தின் கீழ் உள்ள நீர், உணவு, கனிப்பொருட்களை தனது தேவைக்கு அதிகமாக உறிஞ்சிக் கொள்வதும் கிடையாது. தாம் உற்பத்தி செய்கின்ற மலர்கள், இலைகள், கொம்பர்கள், காய்கள், கனிகள், உள்ளிட்ட அனைத்தையுமே பிறருக்குக் கொடுப்பதிலே பூரிப்பும், திருப்தியும் அடைகின்றன. அதுமாத்திரமா,தமது உடலையே மனிதரின் தேவைக்கு அர்ப்பணம் செய்பவை மரங்கள். மரங்கள் தம்மை நாடி வருபவர்களை இன்னார், இனியவர் என்று கொள்ளாது நிழலையும். உண்டியையும், உறையுளையும் தருகின்றன. வாழும் சூழலை மாசு அடையாமல் பாதுகாக்கின்றன. தம்மை வெட்டி அழிக்க வருபவர்களுக்கும் நன்மையே செய்வதில் மரங்கள், செடிகொடிகள் முன்னிற்கின்றன. மக்களின் பசிப்பிணியைத் தீர்ப்பதுமட்டுமல்ல, உடல்நோய்களையும் மாற்றும் மாமருந்தாகவும், சஞ்சீவியாகவும் தாவரங்கள் திகழ்கின்றன. தம் வர்க்கத்தைச் சேர்ந்த பலம் குறைந்த செடி, கொடிகளைத் தம்மீது படர வைத்துப் பாதுகாப்பது பெரிய மரங்களின் பண்பாகவும் உள்ளது. இத்துணை சிறந்த அரிய பாடங்களையும், பண்புகளையும், படிப்பினைகளையும், அறிவிற் குறைந்தவைகள் என்று கூறப்படுகின்ற தாழ்நிலையில் உள்ளவை என்று எம்மால் கணிக்கப்படுகின்ற மரங்கள், செடி கொடிகள், ஆறறிவும் உயர்நிலையும் கொண்ட மனிதர்களுக்குக் கற்றுத் தருகின்றன. ஆனால் மனிதர்கள் தான் அவற்றைக் கற்க மறுக்கின்றனர். கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கின்ற மரங்களை, மரங்கள் தானே என்று ஒதுக்கி விடாது, அவை கற்றுத்தரும் பாடங்களையும், படிப்பினைகளையும் தெளிந்து மனிதர்களாக, வாழ்வோமாக.

❀❀❀ ❀❀❀ ❀❀❀

## எதனால் எப்படி

*காஞ்சி மஹா பெரியவர் சுவாமி சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் காஞ்சி சங்கர மடத்தில் இருந்த காலம். ஒரு நாள் பணக்காரர் ஒருவர் தன் குடும்பத்தாருடன் சுவாமியைத் தரிசிக்க வந்தார். அவர், "சுவாமி என்னிடம் நிறையப் பணம், வசதிகள் இருந்தும் நிம்மதி இல்லை. இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்.*

பெரியவர் பதில் சொல்லவில்லை. அந்தப் பணக்காரரின் குழந்தையை அழைத்தார். அதனிடம் பணக்காரர் கொண்டு வந்த பழங்களில் இருந்து ஒரு ஆப்பிளை எடுத்துக் கொடுத்தார். குழந்தை அதை வலது கையால் பெற்றுக்கொண்டது. இன்னொரு ஆரஞ்சுப் பழத்தை கொடுத்தார். இடது கையால் பெற்றுக்கொண்டது. மூன்றாவதாக ஒரு ஆப்பிள் கொடுத்தார். முதல் இரண்டு பழங்களையும் நெஞ்சில் அணைத்தபடி வாங்குவதற்கு முயற்சி செய்தது. அதனால் ஆப்பிள் நழுவிக் கீழே விழுந்தது. பழத்தை பார்த்துக்கொண்டு அதை எடுக்க முயற்சி செய்தது. அதை எடுக்கும் முயற்சியில் கையிலிருந்த இரண்டு பழத்தை கீழே விட்டது. மேலும் எடுக்க முயற்சித்தது குழந்தை. முடியாமல் அழுதது.

மஹா பெரியவர் அந்த பணக்காரரிடம் "இந்த குழந்தையைப் பார்த்தாயா? இரண்டு பழம் போதுமென்று நினைத்திருந்தால், இப்போது அது அழவேண்டிய அவசியம் வந்திருக்குமா? போதும் என்ற திருப்தி ஏற்பட்டு விட்டால் பிரச்சனை வராது. நிம்மதி கிடைக்கும்." என்று ஆசிகூறி அனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவிழாக் காணும் சிவநேயச் செல்வர்கள்

திருமதி சகிதேவி கந்தையா அவர்கள், U.S.A.

இளங்கோவடிகள் கண்ட இந்திர விழாவா, ஒளிவெள்ளம் இப்படிக் கண்களைக் கூசச் செய்து எமைச் சூழ்கிறதே. வீதியெல்லாம் மாக்கோலம், மக்கள் பட்டுடுத்து, ஆபரணங்கள் அழகுசெய சர்வ அலங்காரத்துடன் சுனாமிப் பேரலையாக குபு குபு எனப் புகுகிறார்களே மாமல்லர் புலிகேசியை வென்று சிவகாமியை மீட்டு வெற்றி விஜயம் வருகிறாரா? இல்லை நாத சுரத்தின் கம்பீர இசையில் மயங்கி நாம் நிற்பது திரு மயிலாபுரியில், தென் கயிலாயமாம் கற்பக மனோகரன் காபாலீஸ்வரர் திருமுன்றிலில், இன்று இங்கு எம் நாட்டில் நாம் எடுக்கும் எல்லா விழாக்களையும் புறங்காணும் ஒரு பெருவிழா நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. வேறு எங்குமே நடைபெறாத ஒரு பெருவிழா விழா நாயகர்கள்? சுந்தரப் பெருமானால் போற்றப்பட்ட, பெரிய புராணம் விரிக்கும் சிவநேயச் செல்வர்கள். சம்பந்தக் குழந்தை பொற்றாளம் ஒலித்து திருவாய் மலர்ந்தருளிய பதிகத்தைச் செவி மடுத்து உளம் நெகிழ்ந்த கபாலீஸ்வரர் எலும்பாகக் குடத்தில் அடைபட்டிருந்த பூம்பாவையை அழகு மங்கையாய் உயிர் பெற்றெள வைத்த திருத்தலம் இ∴து. இங்கு இவ்விழா நடை பெறுவது மிகவும் ஏற்புடைத்து கண்முன்னே பரக்கும் பொற்றாமரைக் குளத்தில் ஆயிரம் ஆயிரம் செந்தாமரை மலர்கள் ஆதித்தன் மெல்ல மறையும் திசை நோக்கி நாணித் தலைகுனிகின்றன. பூவிற் போர் கூடைகளில் நிரம்பி வழியும் மல்லிகைச் சரங்கள் மொட்டவிழ்ந்து மென் சுகந்தம் பரப்பி நிற்க, சித்திர வேலைப் பாடுகள் நிறைந்து கம்பீரமாக நிற்கும் வானுயர்ந்த இராஜகோபுரத்தின் முன் கிழக்கு வீதியில் நிற்கிறோம். இடித்துத் தள்ளிக் கூட்டமாக மக்கள் ஓட அங்கு பார்த்தால்

ஒரே மாதிரி, ஒரே அளவான, நுண்ணிய வேலப்பாடுகளால் அழகு கொஞ்சும் பல்லக்குகள் அறுபத்துமூன்று, முன்வரிசையில் அப்பரும், சுந்தரரும், மணிவாசகரும், ஞானக் குழந்தை சம்பந்தரும் சமஅந்தஸ்து, சமஅலங்காரம். அந்தணன், அரசன், மதிமந்திரி, வேளான்மகன் எந்த ஒரு வேறுபாடுமில்லை, பாகுபாடுமில்லை. கை கூப்பித் தொழுதபடி கபாலீஸ்வரர் எழுந்தருள்வதை எதிர் நோக்கி, கண்சிமிட்டாது வைத்த கண் வைத்தபடியே நிற்கிறார்கள். இவர்கள் பின்னால் ஒருவர் பின் ஒருவராக எம் சமயத்தின் தத்துவத்தை உணர்ந்து, சைவ உலகு பெருமிதமடைய வாழ்ந்த அடியவர் கூப்பிய கரத்துடன் காத்திருக்கிறார்கள்.

மக்கள் உயிர்பெற்று ஆர்ப்பரிக்க, வயிர மணியாரம் ஜெலிக்கிறது, மரகதப் பதக்கம் சிரிக்கிறது, மணிமகுடம் மின்னுகிறது. சண்பகமாலையும் கொன்றையம் தாரும் நேர்த்தியாக அசைந்தாட திருவாசி சிந்திய ஒளி வெள்ளத்தில் நனைந்தபடியே கபாலீஸ்வரர் அருள் பொழிந்து நிற்க பக்கத்தில் சண்பக நாயகி, செங்கைச் சகல கலா மயில், உத்தரீயத் தொழத் தோழம், முத்தாரம், குங்கும வர்ணமும், சந்தனக் குளம்பும், கருணைத் திருநயனமும், அரும்பும் இளநகையும், ஆரண நூபுரம் சிலம்பும் திருவடியுமாக வீதி உலா வர ராஜ கோபுரவாயிலை வந்தடைகின்றார்கள்.

'வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும் செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை மறந்து, ஏன்வந்தோம், என்ன செய்கிறோம் என்பதை மறந்த நிலையில் எம்முன் எழும் பக்திப்பிரவாகம் பாட்டில் வெளிவருகிறது.

கபாலீஸ்வரருக் கரோகரா. சிவநேயச் செல்வர்களே வாழ்க நீவீர். முழக்கம் வானைப் பிளக்கின்றது. ஆடுவார் பாடுவார் தமைமறந்து ஓடுவார் என மக்கள் கூட்டம் மகிழ்ந்து கொண்டாட

சிலையாகக் கோவில் மணிமண்டபத்தில் வீற்றிருக்க மாத்திரம் பார்க்கும் 63 நாயன்மாரும் உயிர் பெற்று நெகிழ்ந்து போய் செண்பக நாயகி சமேதகபாலீஸ்வரரை தரிசித்து அவருடன் வீதி உலா வரப் புறப்படுகிறார்கள். மேளதாளத்துடன்,பல்லியம் முழங்க நாதசுர இசை இதமாக ஒலிக்க பக்தர்கள் தமை மறந்து ஆர்ப்பரிக்க வீதியுலா ஆரம்பமாகிறது.

நன்றாகக் கூர்ந்து பாருங்கள். எம்மரபு பிசகாது, பண்பாடு சிதறாது 63 நாயன்மார்களும் கூப்பிய கரமும், ஈசன் மேல் பதித்த விழிகளுமாய் பின் அடி வைத்து, வீதியுலா வரும் கபாலீஸ்வரரை வரவேற்று நகர்கிறார்கள். அற்புதத்தில் அற்புதம்! அர்ச்சனைகள், சிதறு தேங்காய்கள், பரிமள சுகந்த பன்னீர், மலர்தூவுதலென அடியவர் ஆர்பரிக்க, சிவநேயச் செல்வர்கள் முன்செல, எம் ஈசன் எம் பாசத்தொடரை அறுத்து, பிறப்பின் பொருளை உணர்த்தி அருள் சிந்திப் பவனிவரும் காட்சி பெரும் பெறத்தகும் பேற்றிற்குரியது.

பல்லவர் கால பாடல் பெற்ற திருத்தலம் கபாலசீசுரம் பல்லவர்கால அதன் புராதன அமைப்பு மாறாது பாதுகாத்து கற்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் கருங்கல் வேலைப்பாடுகளுடன் அப்படியே இருக்க(கொஞ்சம் இருள்) வெளிமண்டபங்கள் எல்லாம் புதிப்பிக்கப்பட்டு மொசாத் தரையும் பளீச் சென்ற சுவர்களுமாய் குறுகுறு என இருக்கின்றன. மூலவர் இயல்பாய் ஒளிவீசும் லிங்கருபம், காலங்காலமாய் நன்கு பேணப்பட்டு, அபிடேக ஆராதனைகள் சிறப்புற நடை பெறுவதாலோ என்னவோ, அன்புடன் செல்லும் அடியவரை காந்தமென அருகிழுக்கும் அற்புத சக்தியுடையவராய், திரும்பத் திரும்பப் போக வேண்டுமெனும் அவாவை மனதில் தூண்டும் தனித்தன்மையும் உடையவராய் விளங்குகிறார்.

இங்கு கபாலீஸ்வரருக்கு உரிய முக்கியத்துவம் வெற்பரையன்மகன், தேன் மொழிக் கற்பக நாயகிக்குண்டு. அம்பாளின் திருவுரு 4 அடிகளுக்கு மேல். பாங்காகச் சேலைஉடுத்து ஆயியளாய், பொருந்திய முப்புரை, செப்புரை செயும் பூண் முலையும், வருந்திய வஞ்சி இடையுடனும் குறு நகை தவள நிற்பது ஒரு நிமிடம் எமை நோக்கி நூபுரம் சிலம்பை மெல்லடி பெயர்த்து வருகிறாரோ என மயங்க வைக்கும் தத்ருபத்திருவுரு. அழகிற்கு அழகு இவர் பேர் அழகு- எடுத்துரைக்க அபிராமிப்பட்டரால் தான் முடியும். குங்கும அர்ச்சனை, விசேட உற்சவங்களென தனிச் சன்னிதானத்தில் வீற்றிருக்கும் கற்பக நாயகியின் திருவருளில் மூழ்க இது ஒரு திருத்தலம் சக்தி அன்பர்க்கு.

63 நாயன்மார்களும் பெரு மண்டபத்தில் அழகுச் சிலைகளாக நித்திய பூசைக் குரியராய் அமர்ந்திருப்பது இக் கோவிலின் தனித்துவம். இவர்கள் இல்லையேல், அறியப்பாடிவிட்டில் எம் சமயத்தின் கருப் பொருளைப் பலர் சிறப்பாக பிறசமயத்தவர், பிறநாட்டவர் புரிந்திருக்க முடியாது. வேத ஆகமங்களைக் கற்று எம் சமயத்தின் உன்னதத்தை விளக்கியவர் சிலரே. தேவார திருவாசங்கள், பண்சிதறாது ஓதப்படும் போது கேட்டு உளம் நெகிழ்வோர் பலர். பாடியவர்களை அறியவேண்டுமெனத் துடிப்போரும், கூறும் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன என அறியும் அவாவுடையோரும் பெரியபுராணம், கந்தபுராணமென இவர்கள் ஈடுபாடு மெல்ல எம் சமயத்தை வந்தடைகிறது. கருவிற் பிறந்தோர் தெய்வமாகார் எனும் கருத்தை சிலர் வலியுறுத்துகிறார்கள். இலட்சிய நெறி நின்று தெய்வீகமுற்ற எம் பெருந்தகைகள் கபாலீஸ்வரர் திருத்தலத்தில் தெய்வ அந்தஸ்தும் பெறுகிறார்கள் என்பது பெருமைக்குரியது.

கிரியா யோக நெறியில் நின்று தன் உடலைத் தான் நினைத்த வினாடியில் பேசிக் கொண்டிருந்த மேடையிலேயேவிட்டு, ஞான வெளியில் கலந்த ஸ்ரீபரமகம்ச யோகானந்தா கூறும் கருத்து இவர்கள் வாழ்வின் பொருளை நன்கு விளக்குகிறது.

**The testimony of the great ones must never be discarded. they lived on earth Immaculately, willing to endure any cross accepting without hesitation to go Through any difficulty in order to bear witness to Trouth. They testify that godis.**

பெருமை மிக அடியவரை நாம் என்றும் குறைத்து மதிப்பிடலாகாது. அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த தூய்மை, எத்துணை இடரையும் தாங்கும் உள்ளம், எவ்வித துன்பத்தையும்(சிலுவையையும்) எந்தச் சலனமுமின்றி ஏற்றுக் கொள்ளும் வலிமை எல்லாம் மெய்ப்பொருள் உண்மைக்கு சாட்சியாகிறது. கடவுள் உண்டு என்பது இவர்களால் உறுதியாகிறது.

கொடுமையான சாதிப் பாகுபாடுதான் எம் சமயத்தின் முக்கிய விடயம் எனக் கருதும் பிறமதத்தவர் பலருளர். எவ்வளவு அர்த்தமற்ற குற்றச் சாட்டு இது என்பதை விளக்குகிறவர்களும் எம் சிவநேசச் செல்வர்களே திருநீலகண்டக் குயவனாரும், அந்தணகுலக் குழந்தையும், துணி துவைக்கும் சேவகரும் பெரிய புராணத்தில் எந்த ஒரு வேற்றுமையுமின்றிப் போற்றப்படுகிறார்கள்.

திருக் கபாலீஸ்வரர் பெற்றாமரைக் குளம் அமைக்க ஒரு பங்குக் காணியை அன்புடன் கொடுத்தான் ஒரு குறு நில முஸ்லீம் மன்னன். இவர்கள் பரம்பரையினரை இன்றுவரை மகோற்சவ காலங்களில் முதல் மரியாதை பெற்று, பூசையில் பங்கு பெறுவதும் மேளதாளத்துடன் இவர்களுக்கு பிரசாதம் அனுப்பப்படுவதும் கோவில் நீண்ட கால நடை முறை. ராம்கான் பண்டிகைக்கு இக் கோவில் தண்ணீர் கொடுத்து உதவுவதும் முன்பு வழக்காய் இருந்திருக்கிறது. மதங்களுக்கிடையே பரஸ்பரம் நிலவ வேண்டிய மேன்மையான உறவு இங்கு பேணப்படுவது போற்றற்குரியது.

பாபநாசம் சிவன் முதல் பல்வேறு இசை வல்லுனர்கள் போற்றிக் கொண்டே இருக்கும். பாடிக் கொண்டே இருக்கும் சங்கீதமே முழங்கும் திருமயிலாபுரியையும், கபாலீஸ்வரரையும், சண்பக நாயகியையும்- சிந்திப்பவர் பேறு பெற்றோர்.

**உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்**

| | |
|---|---|
| அலுவலகம்: | ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், |
| ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், | கோவில் வீதி, |
| தெல்லிப்பழை. | நல்லூர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ நிந்தனை

பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள்

நிந்தனம்- நிந்தனை, தூஷணை, அவதூறு, நிந்தனை- நிந்தை அவச் சொல்.

இழிவுசெய்தல், தூசித்தல், பகிடிபண்ணல், கொச்சைப் படுத்தல், இகழ்தல்,அவதூறு செய்தல், பழித்தல், பழிப்புரை செய்தல் எல்லாமே ஒன்றை நிந்திக்கும் பாணியில் அமைந்தவை. வந்தனையின் எதிர் நிந்தனை ஒன்றைத் தரக்குறைவாகப் பேசல் நிந்தனையின் பாற்பட்டது. தாயைப் பழிச்சாலும் தண்ணியைப் பழியாதே என்பது நாட்டார் வழக்கு. தாய் தந்தை, ஆசான் குரு, பெரியோர், அரசன், ஞானிபோன்ற மதிப்புக்குரியவர்களை மதியாமற் பேசுவது நிந்தனை. இவ்வண்ணமே இறைவன் பற்றிய பழிப்புரை எல்லா நிந்தனைகளிலும் தெய்வத்தை நிந்திப்பது பாவம். இதற்கு மன்னிப்போ,மாற்றுவழியோ இல்லை. இறை நம்பிக்கை இல்லாதவர்கள், மூடக்கொள்கைகள், நம்பிக்கைகள் போன்றவற்றை ஏற்காதவர் எதையும் விஞ்ஞானக்கண் கொண்டுபார்ப்பவர்கள். சைவசமயிகள், இந்துமதத்தவர் என்று தம்மை இனம்பிரிப்போர் பேசுவதொன்று, செயற்படுவது வேறு. பேசுவது மானம், பேணுவது காமம் என இராவணனைத்தம்பி விபீடணன் சொன்னானே. இது பொதுவில் போலிச் சமயவாதிகட்கு நிறையப் பொருந்தும்.

கடவுளை குறிக்கும் தெய்வம் என்ற பாவனை சமய இலக்கியங்களையும் கடந்து வழங்கக் காணலாம். தெய்வ வள்ளுவன்,தெய்வச் சேக்கிழார் என்பன அவர்களை மேம்பாடாகச் சொன்னபாணி பூஜயர் சுந்தரசேகரசரசுவதி சுவாமிகளான காஞ்சிப் பெரியவர்களின் வெளிப்பாடுகள் தெய்வத்தின் என்ற பெயரில் ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தெய்வமே இரண்டறக் கலந்து பாடியவை நால்வரும் ஆழ்வார்களும் அருளிய பாடல்கள் வள்ளுவர் வாக்கில் தெய்வமென்ற பிரயோகம் இருகுறட் பாக்களில் நேரடியாகப் பேசப்படுகிறது.

**தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**

தமிழ் வேதம் 55

**தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலிதரும்**

மேலது 619

ஔவைமூதாட்டி "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வ"மென புதுமை செய்தார். அன்னைதான் தந்தையைக் காட்டினாள் அவ்விருவருமே தெய்வத்தைக் காட்டிய கண்கண்ட தெய்வங்கள். எனவேதான் தமிழன்னை, பெற்றோரைத் தெய்வமாக்கினாள். உண்மையில் அன்னைதான் முதற்குரு என்பர். இறை நிலைபற்றிப் பல இடங்களிற் பாட்டி தொட்டுப் பேசுகின்றாள். திருமாலுக்கு அடிமைசெய், ஆலயம் தொழுவது சாலமும் நன்று, சிவத்தைப் பேணின்தவத்திற் கழகு, தெய்வம்சீறின்கைதவமாமும், சிவாயநம என்று சிந்திப்போர்க்கு அபாயமொருநாளுமில்லை, எனையாளும் ஈசன் செயல் என்பன ஔவையின் ஆழ்ந்த- கூர்த்தசிந்தனைகள். இப்படிப் பொருண்மை நிறைந்த கருத்துக்களைச் சொல்லி, தெய்வம் இகழேல்(ஆத்திசூடி 60) எனச்சுருக்கமாக சுலோகமாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியுள்ளார். இதன் பொருள் கடவுளைத்தாழ்த்திப் பேசாதே என்பதாகும். இன்றைய விஞ்ஞானமயத்திலே தெய்வம் பற்றிய கருதுகோள் வித்தியாசமானது. சிலம்பு பாடிய இளங்கோவடிகள் இறுதியிலே சில பணிப்புரைகள் தந்துள்ளார். அது எச்சமயத்தோர்க்கும் தோதானது.

**தெளிவுறக்கேட்ட திருத்தகு நல்லீர்**
**பரிவும் இடுக்கணும் பாங்குறநீங்குமின்**
**தெய்வந் தெளிமின் தெளந்தோர்ப் பேணுமின்**
**பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்**
**ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்**
**தானஞ்செய்மின் தவம்பல தாங்குமின்**
**செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பிகழ்மின்**
**பொய்க்கரி போகன்மின்** சிலப்பதிகாரம்.

இவ்வரிகளிலே தெய்வத்தை அறி, அறிந்தவரோடு நாம் சேர்ந்து அவர்களைப் பேணினாற்றான் வாழ்வு மட்டுமின்றி ஆன்மீக வாழ்வு பிரகாசிக்கும் என எம்மை நெறிப்படுத்துகிறார் இளங்கோவடிகள்.

தெய்வம் என்ற பயன்பாடு நால்வர் வாக்கிலும், ஆழ்வார் பாசுரங்களிலும் பயிலக் காணலாம். மணிவாசகர் தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி என எழுதியுள்ளார்.

**தெய்வப்புனற்கெடில வீரட்டமுஞ் செழுந்தண் பிடவூருஞ்**
திருமுறை 6:7.6

**தெய்வ நாயகன் நாரணன் திரிவிக்**
**கிரமன் அடியிணைமிசை**
திருவாய் மொழி 5:7.11

**தெய்வங்காள் என்செய்கேன்** மேல் 5:4.8

**தெய்வம் வேறுஉளது, என்பவர்சிந்தனை**
**நைவர் என்பதும், நற்பரதற்பர**
**சைவ சிற்சிவனே உனைச் சார்ந்தவர்**
**உய்வர் என்பதும் யான்உணர்ந்தேன் உற்றே**
தாயுமானவர் பொன்னைமாதரை 76

தெய்வத்தை ஏற்காத சமயங்களும் உண்டு. தெய்வ நம்பிக்கையில் வாழும் சமயங்களும் உண்டு. சைவ சமயிகள் தெய்வத்தை ஏற்றுக் கொண்டவர்கள். இந்துக்கள் என்று சொல்பவர்களும் தெய்வ நம்பிக்கை நிறைந்தவர்கள். வைணவர் விஷ்ணுவையன்றி புறந்தொழாத கடைப்பிடி நிறைந்தவர்கள்.

**"திறம்பேன் மின்கண்டீர் திருவடிதன் நாமம்**
**மறந்தும் புறந்தொழா மாந்தர்- இறைஞ்சியும்**
**சாதுவராய்ப் போதுமின்கள் என்றான், நமனுந்தன்**
**தூதுவரைக் கூவிச் செவிக்கு**
திருநாலாயிரம். நான்முகன் திருவந்தாதி 6

சிவத்தோடு சம்பந்தம் உடையது சைவம். எனவே சைவசமயிகளின் முழுமுதற் தெய்வம் சிவன் என்பதை நாம் மறந்து பிற சமயவழிபாட்டைச் சிவாலயங்களே வெளிநாட்டில், மேற்கொள்ளக் காணலாம். எனவே ஆண்டவன் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஆலயங்களிலேதான் இறைவன் இருக்கிறான் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையில் ஆழமாயுள்ளவர்கள் சைவசமயிகள். எனவே தெய்வம் பேணுவோம். பழியோம், இகழோம், இதையே ஔவையார் தெய்வம் இகழேல் எனத்தாய் மொழியிலே பொறித்து நல்லபடிப்பினையை வழங்கியுள்ளார்.

அண்மைக்கால நிகழ்வுகள் நடைமுறைகள் தெய்வத்தைப் புறக்கணித்து மனிதத்தைப் போற்றும் அளவுக்கு மாறக்காணலாம். ஒரு கற்புடைய பெண் ஒருவனைப்பற்றி ஓரகத்திரப்பது போல எம் இறை வணக்கமும் அமைய வேண்டு மெனத் தாயுமான சுவாமிகள் அறுத்து உறுத்துச் சொல்லுகிறார்.

**கற்புறு சிந்தைமாதர்**
**கணவனை அன்றிவேறோர்**
**இல்புறத் தவரை நாடார்**
**யாங்களும் இன்ப வாழ்வும்**
**தன்பொறி ஆக நல்கும்**
**தலைவநின் அலது, ஓர்தெய்வம்**
**பொற்பு உறக்கருதோம் கண்டாய்**
**பூரணானந்த வாழ்வே.**

36 கற்புறு சிந்தை

(இ.ள்) கற்பு - கற்பானது, உறு-மிகுந்த, சிந்தை-மனத்தினை உடைய, மாதர்-பெண்கள், கணவரை, அன்றி - நாடுவது அல்லாமல், வேறு - அந்நியமாகிய, ஓர்-ஒரு, இல்புறத்தாரை - அயல்வீட்டாரை, நாடார். நாடமாட்டார்கள். (அதே போல) யாங்களும் - நாங்களும், இன்பவாழ்வும்- சக வாழ்க்கையையும், தன்பொறிஆக- தன் செல்வமாக, நல்கும் - தந்தருளுகின்ற, தலைவ - முதல்வனே நின் அலது- உன்னை அன்றி, ஓர்தெய்வம், மற்றொரு தெய்வத்தை, பொற்பு உற- பொலிவடைதற் பொருட்டு கருதோம். நாடோம், பூரண ஆனந்தவாழ்வே - பரிபூரணானந்த இன்பவாழ்வையுடையனவே.

(பூவை கலியாண சுந்தரமுதலியார் உரை)

ஒரு பெண் தன்கணவரை விடுவித்துப் பிறவாடவருடன் சேர்வராயின் கற்பையிழந்து நரகத்தையடைவர். அவ்வாறே சைவசமயிகள் சிவபெருமானை ஒதுக்கி அந்நிய தேவர்களை நாடினால் இறப்பினும் பிறப்பினுந்துன்பமடைந்து நரகெய்துவர் என்பது வெளிப்படையாம்.

இக்கருது கோளை குலசேகரப்பெருமாள் வழிமொழிந்து ஒரு பாசுரம் தந்துள்ளார்.

**கண்டார் இகழ்வனவே**
**காதலன்றான் செய்திடினும்**
**கொண்டானை யல்லா**
**லறியாக குலமகள் போல்**
**விண்டோய் மதிள்புடை சூழ்**
**விற்றுவக் கோட்டம்மா நீ**
**கொண்டாளா யாகிலுமுன்**
**குரைகழலே கூறுவனே**

பெருமாள் தழருமொழி 5.2

தொன்மை மேன்மையும் இறுக்கமும் நிறைந்த சைவத்தைப் பேணி வாழ்ந்த ஈழச் சைவப் பெருங்குடியினர் புலம்பெயர் தேசங்களிற் திசைமாறிப் போவது போன்ற கானல் நீர்க்காட்சி மலிந்திருப்பதாகத் தெரிகிறது. இறைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமேனி தாங்கி வெளிவரும் படங்களில் சினிமாவிளம்பரப் படம் போல் அரைகால் முத்தால்வடிவம் தாங்கிக் காலகண்டர்களில் வெளிவருவது அரை குறைத் தோற்றங்களே இறைவன் பரிபூரணன். எனவே படங்கள் பூரணதோற்றம் உடையனவாய் அமைய வேண்டும் படங்கள் சிவனைக் கொச்சைப்படுத்தும், தூசனை செய்யும் பாங்கில் வெளிவருவது இறைவனை இறைவியை ஏழனம் செய்து இழிவு படுத்துவதாகும். வீட்டில் வழிபடும் படங்கள் பூரண தோற்றம் உடையனவாய் இருப்பதே முறைமை. ஓவியர்கள் தாம் இஸ்டப்படி தீட்டுவனவும் கற்பனையால் வடிவமைப்பனவும் வழிபாட்டுக்கு உரியனவன்று, தந்தை தாயார் போட்டோக்களைக் கூட அரைகுறைத் தோற்றத்துடன் வைத்திருப்பது கூட அவர்களை மதிப்பிழக்கச் செய்வதாம்.

**அவரவர் தாந்தாம் அறிந்தவாறேத்தி**
**இவரீவ ரெம்பெருமான் என்று- சுவர்மிசைச்**
**சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த**
**மூர்த்தி யுருவே முதல்.**

முதற்றிருவந்தாதி 14(பொய்கையாழ்வார்)

இவ்வண்ணமே இறைவனது பஞ்சாட்சரம், முருகனது சடாட்சரம்,திருமாலது எட்டெழுத்து மந்திரம், அம்பாள் மந்திரங்களைச் சால்வைகளிலே பதித்து (அச்சடித்து)க் கட்டுவதும் அந்தமந்திரங்களை இகழ்வதாகும். இச்சிவத்துரோகம் செய்வோர் பாவிகள் மட்டுமின்றி இதன்பயனை அனுபவிக்கவே செய்வர். அழுக்கான நிலத்தில் அம்மந்திரங்களுடன் உட்காருவதும், குண்டிப்புறத்திலே மந்திரங்கள் படிவதும் பாவச் செயலாம். இத்தெய்வநிந்தனைக்கு ஆலயநிர்வாகமோ,பூசகர்களோ, அதைப் பாவிப்பவர்களோ ஆளாகாமல் இருப்பது உண்மைச் சமயிகளின் கடமையாம். தீயவைதீயபயத்தலால் (அன்று) தீயினும் அஞ்சப்படும்.

இக்கண்ணோட்டத்தில் திருமண அழைப்பிதழ்களிற் கடவுட் படங்களைச் சேர்த்தல், நினைவு மலரில் பிள்ளையார், முருகன், சிவன், அம்பாள்படங்களை வெளியிடல், தைப்பொங்கல் வாழ்த்து, தீபாவளி வாழ்த்து, சைவசித்திரை வருடப்பிறப்பு வாழ்த்து மடல்களிற் கவர்ச்சிகரமாகப் பலவித தெய்வப் படங்களையும் பிரசுரித்தல் எல்லாமே தெய்வத்தைப் பேணாநிலை. இப்படங் களோடு கூடிய வெளியீடுகள் சமயிகளாற் பேணப்படாமல் வீசப்படுவதும், அழுக்குகள் நிறைந்த குப்பைத் தொட்டிகளை நிரப்புவதும் ஒரு சமயத்தை தூசனை பண்ணுவதாகும். சோதிடர்கள், கல்யாணத்தரகர்கள், வர்த்தகமுகவர்கள், பூசகர்கள், ஆலயபரிபாலகர்கள் போன்ற பலர் சைவசமயத்தை மதியாமல், வழிபடு தெய்வங்களின் படங்களைக் கலண்டர்களில் வெளியிடுவதும் ஆலயங் களின் இந்நடைமுறை தாம் வழிபாடியற்றும், தெய்வங்களையும், தாம் சார்ந்த சமயங்களையும் தாமே நிந்தனை செய்வதாகும்.

பல்லாயிரக்கணக்கான கலண்டர்களை, எல்லாக் கோயிற் சொந்தக்காரரும் வெளியிடுவர். ஒருவீட்டுக்கு ஒருகலண்டர் தான் பாவனைக்குப் பயன்படும். மீதி கிடந்து சீரழிவதை நேரிற்காண முடிகிறது. இப்படங்களின் அவலநிலை, அந்தி மத்தில் எரிக்கப்படும், குப்பையோடு சேர்த்து பசளையாக்கப்படும் நிலைக்கிள் ஆகும். சைவசமயிகள் இவற்றில் அக்கறையுள்ளவர்களாய் இருப்பது முக்கிய மாகும். பிற சமயிகள் இப்படியான இறை நிந்தனைக்கு இடம் கொடுக்க மாட்டார்கள். எனவே நம்சைவ நெறியையும் தெய்வங்களையும் பேணுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரக் கடவுள்

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பார்ந்த பிள்ளைகளே! அன்பு வாழ்த்து!

செந்தமிழ்க் கடவுளான முருகப் பெருமான் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலே நெருப்புப் பொறி வடிவில் தோன்றி, சரவணப் பொய்கையில் வளர்ந்தவர் என்ற கதையை கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படி ஈசனுடைய நெற்றிக் கண்ணிலே நெருப்புப் பொறியாக முருகன் உதித்ததற்கு ஒரு காரணம் சொல்லியிருக்கிறார்கள். அதற்குள் ஒரு சுவையான கதையே இருக்கிறது. அந்தக் கதையை கேளுங்கள்.

கைலாச மலையின் வடக்குத் திசையிலே ஒரு ஆலமரம் உள்ளது. அது கல்லாலமரம். அந்த மரத்தின் அடியில் சிவபெருமான் மௌனத்தவத்தில் ஆழ்ந்து இருந்தார். அப்போது அங்கே முற்றும் துறந்தவர்களும், முற்றும் உணர்ந்தவர்களுமான நான்கு முனிவர்கள் வந்தனர். சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்ற பெயர் பெற்ற அந்த நால்வரும் ஈசனை வணங்கி, அவரைச் சூழ அமர்ந்தனர். "பெருமானே! எல்லா உலகங்களுக்கும் தகப்பன் தாங்கள், எல்லா உயிர்களுக்கும் உருவும் தாங்கள் தான். ஆகவே: எங்களுக்கு மெய் ஞானத் தத்துவத்தை உபதேசிக்க வேண்டும்" என்று சிவனைப் பிரார்த்தனை செய்தனர். அவரும் ஞானமென்பது "மோன வரம்பு" என்பதை உணர்த்த மௌனத் தவத்தில் அசையாது வீற்றிருந்தார். அறிவை அறியும் நுண்புலம் பெற்ற அந்த நான்கு தவசீலர்களும் அதை உணர்ந்து தாமும் மௌனத்தியானத்தில் ஆழ்ந்து மெய்யுணர்வு பெற்றார்கள்.

சிலகாலம் சென்றபின் சிவபிரான் இமாசலத்தில் தவம் செய்த பார்வதி தேவிக்கு அருள்புரியும் நோக்கத்துடன் அங்கிருந்து மறைந்து சென்றார். சனகர், சனாதனர், சனந்தனர் ஆகிய முனிவர்கள் தாம் பெற்ற ஞான அநுபூதியை மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் அங்கிருந்து எழுந்து சென்றனர்.

சனற்குமாரர் என்ற இளம் துறவி தாம் பெற்ற ஞான அநுபவத்திலேயே ஒன்றிப் போய் அங்கேயே அசையாமல் இருந்துவிட்டார். பல காலத்தின் பின் சிவபிரான் வட ஆலமரத்தடிக்கு மீண்டும் வந்தார்.

சனற்குமாரரோ ஈசன் வந்ததைக் கூடஅறியாதவராக மோன நிஷ்டையிலே கல்லைப் போல இருந்தார். நல்லமாணவனைக் கண்டால் நல்ல ஆசிரியருக்கு ரொம்பவும் மகிழ்வாயிருக்கும் அல்லவா! தான் சொல்லாமல் சொன்ன உபதேசத்தின் மெய்ப்பொருளை உணர்ந்து அதுவாகவே ஆகியிருக்கிற சனற் குமாரரைக் கண்ட சிவபிரான் மிகவும் மகிழ்ந்தார். அவரை எழுப்பினார்."மகனே! உன் பக்குவநிலை கண்டு மிக மகிழ்வு. உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள். தருவேன்" என்றார் சிவபிரான். சனற்குமாரர் புன்னகை செய்தார். "இறைவா! எதுவுமே வேண்டாத நிலையியே நாம் வேண்டியது. தங்கள் அருளால் அது கிடைத்தது. இனி வேறு எதுவும் வேண்டா." என்று சொன்னார். இறைவனுக்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் புளுகம். "மகனே! நீ நிறைநிலை பெற்றுவிட்டாய். எனினும் ஏதாவது-என்னிடம் கேள். உனக்கு வரமளிப்பது எமக்கும் பெருமை" என்றார் அவர்.

சனற்குமாரர் சிரித்தார். "ஈசா! வேண்டாமை என்னும் விழுச் செல்வம் பெற்ற எமக்கு வேண்டுவது யாது ஒன்றும் இல்லை. வேண்டுமானால் தங்களுக்கு ஏதும் கேளுங்கள் கிடைக்கும்." என்றார் முனிவர்.

"அப்படியா?" என்று வியந்தார் ஈசன். "சரி நீ எனக்கு மகனாக வர வேண்டும் " என்று வரம் கேட்டார்."ஆகட்டும் தந்தையே! சக்தியின் தொடர்பு இல்லாமல், நேரடியாக உங்களிடமிருந்தே யான் உங்கள் பிள்ளையாகப் பிறக்கவேண்டும்." என்றார் சனற்குமார முனிவர்.

அதன்படியே சிவபெருமானுள் ஐக்கியமாகி, அவரது நெற்றிக் கண்ணின் வழியே ஆறு நெருப்புப் பொறிகளாகப் பிறந்து, கங்கையிலே குளிர்ந்து, சரவணப் பொய்கையில் மலர்ந்து, கார்த்திகேயனாக எழுந்தார், என்று சனற்குமார கீதை என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது.

❀❀❀ ❀❀❀ ❀❀❀

## பிள்ளையாரே

வழி காட்டும் தெய்வமப்பா எங்கள் பிள்ளையாரே
வடி வேலனின் அண்ணனடா எங்கள் பிள்ளையாரே
நின் கழலடிகள் சரணடைந்தோம் எங்கள் பிள்ளையாரே
நீரே வாழ்வில் துணையாவீர் எங்கள் பிள்ளையாரே

எலி வாகனம் கொண்டவரே எங்கள் பிள்ளையாரே
ஏழை எங்களுக்கு அருளிடுவீர் எங்கள் பிள்ளையாரே
கரைசேர துடிக்கின்றோம் எங்கள் பிள்ளையாரே
கால பயம் நீக்கிடுவீர் எங்கள் பிள்ளையாரே.

## அறுகம்புல்லின் மகிமை

அறுகம் புல்லுக்குள் மகிழ்ந்திருப்பார் பிள்ளையார்
அறுகம்புல் அர்ச்சனையை ஏற்றிடுவார் விநாயகர்
அறுகம்புல்லால் வாழ்த்தி வணங்கினால் அருளுவார்
அறுகம்புல்லில் விரும்பி உறைபவர் விக்கினேஸ்வரர்

அறுகம்புல்லை தனக்கே உரியதாக்கிக் கொண்டாரே
அறுகம்புல்லால் பலநோய்களை நீக்க அருளினாரே
அறுகம்புல்லே உலகில் மகாசக்தி பெற்றதுவே
அறுகம்புல்லில் என்றும் நிறைந்திருப்பார் கணபதியே.

ஆக்கம்: **கி. கிரிசாம்பாள், மானிப்பாய்**

## துர்க்கையம்மா

எங்கள் தாயே துர்க்கையம்மா
எல்லாம் அறிவாய் துர்க்கையம்மா
எதிலும் நிறைவாய் துர்க்கையம்மா
எப்பொழுதும் அருள்வாய் துர்க்கையம்மா

எழில் மிகுந்தவள் துர்க்கையம்மா
எதற்கும் துணிந்தவள் துர்க்கையம்மா
எந்தன் தெய்வம் துர்க்கையம்மா
என்றும் துணையானவள் துர்க்கையம்மா

## குழந்தைக் கண்ணன்


சின்னக் குழந்தைக் கண்ணன்
சிரித்து தவழ்ந்து வருவான்
வண்ணப் பூக்களைக் காட்டி
மகிழ்ச்சி கொள்ளச் செய்வான்

குறும்பு செய்து மகிழ்வான்
கொஞ்சிப் பேசி சிரிப்பான்
வெண்ணை அள்ளித் தின்பான்
வேண்டும் வரம் தருவான்

ஆக்கம்: **கி. துர்க்காம்பிகை, மானிப்பாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ



சுன்னாகம் மயிலணி, திருக்குடவாயில்

**விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில்**

(மயிலணி சிவன் கோவில்)



ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன

# மஹா கும்பாபிஷேகம்

## 01-06-2006

எண்ணைக் காப்பு 31-05-2006 புதன்கிழமை

12-00 மணி வரை

கிரியா ஆரம்பம் 28-05-2006 ஞாயிற்றுக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவன் அருட்கதைகள்

மாதாஜீ அவர்கள்

8. அன்னக்குழியும் வைகையும் அழைத்த கதை.

குண்டோதரன் பசியடங்காமையால் துடிதுடித்ததைக் கண்ட சோமசுந்தரக் கடவுள் தடாதகைப் பிராட்டியைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். பின்னர் அன்னபூரணியை நினைந்தருளினார். உடனே நான்கு குழிகளிலே தயிர்கலந்த அன்னம் தோன்றியது. சிவபெருமான் குண்டோதரரைப் பசிதீர உண்ணும்படி அருளினார். அவ்வாறே குண்டோதரர் கையினால் அவ்வுணவை எடுத்துப் புசித்ததும் பசிப்பிணி நீங்கி, நாவரண்டு தண்ணீர்த் தாகம் எடுத்தது. உடனே சரீரம் வீங்கி நிலம் கிழிபட மலைபோல விழுந்து உருண்டு வாவிகள், நதிகள் முதலியவற்றின் நீரைக் குடித்தும் தாகம் அடங்காது தவித்த போது எம்பெருமான் தனது திருமுடியிலுள்ள கங்கையை நோக்கி, “நீ இம்மதுரையின் புறத்து ஒரு நதியாகி விரைந்த வருவாய்” எனப்பணித்தார்.

அப்போது கங்கையானவள் எம்பெருமானை வணங்கி, அன்றும் பகிரதனுக் காக கங்கா தீர்த்தமாகிய போது, கங்கையில் ஸ்நானம் செய்தவரின் பாவம் தீரும் என்று அருளியது போல இன்று நாம் மதுரையின் புறத்தே நதியாகி வரும் போது, அடியேனைத் தரிசித்தவர், நீராடியவர்கள் பிறவித் தொடர் வினையறுக்க வேண்டுமென வரம்கேட்டு மதுரையின் புறத்தில் ஒருநதியாகப் பெருகிவந்தது. குண்டோதரர் நதியினுள் புகுந்து இருகைகளாலும் நீர் அள்ளிப் பருகத்தாகம் தீர்ந்தது. தேவர்கள் முதலானோர் கீதங்கள் பாடி மலர்மழை சொரிந்தனர். சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரோடும் பூமியை அரசு செய்ய எழுந்தருளினார்.

9. எழுகடல் அழைத்த கதை

வேதங்களாலும் அளவிடப்படாத முழுமுதற்கடவுளாகியசிவபெருமான் பாண்டியமன்னனாகி உலகெலாம் ஒருவெண்கொற்றக்குடைக் கீழ் செங்கோல் செலுத்திவருகின்ற நாளில், வேதங்களை நன்றாக கற்ற முனிவர்கள் இருஷிகள் வரை எம்பெருமானைத் தினமும் தரிசிக்கச் செல்வார்கள். ஒரு நாள் கௌதம் முனிவர் சிவபெருமானைத் தரிசித்துத் திரும்பும் போது காஞ்சனமாலையின் அரண்மனைக்குச் சென்றார். காஞ்சனமாலை எதிர் கொண்டு முனிவரை வணங்கி அழைத்து ஆசனத்தில் அமரச்செய்தார். பின்னர் அவர் கௌதம முனிவரை வணங்கி “வேதங்களின் சிரசாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநிடதங்களில் விளங்கும் பொருள் பரமசிவன் என்று தெளிந்த முனிவரே! அடியேனுடைய பிறவித்துன்பத்தை நீக்கவல்ல தலம் யாது அருளிச் செய்ய வேண்டுமென" விண்ணப்பம் செய்தார்.

கருணையே வடிவமான கௌதமர் திருமுகம் மலர்ந்து, மலையத்துவச பாண்டியனின் பெருந்தகைப் பத்தினியே! உலக மாதாவாகிய தடாதகைப் பிராட்டிக்குமாதாவானாய். பிரமா விட்டுணு தேவர்களால் அறிய முடியாத சிவபெருமானை மருமகனாகப் பெற்றுக் கொண்டாய். நீயறியாதது இப்பூவுலகில் உண்டோ. ஆயினும் சொல்வோம் கேள். தவம் மூன்று வகைப்படும். மானதம், வாசிகம், காயிகம் என்பனவாகும்.

அவற்றுள் மாதனம் என்பது வாய்மை, இரக்கம், பொறை ஐம் பொறியடக்கல், சிவத்தியானம், தருமதானங்களில் சிந்தனை வைத்தல் முதலியன வாம். வாசிகமாவது பஞ்சாட்சரஜெபம், சதருத்திரபாராணம், தோத்திரம், தருமங் களை எடுத்துச் சொல்லல் முதலியனவாம். காயிகங்களாவன, சிவனைப்பூசித்தல் சிவாலயங்களை வலம் செய்து வணங்குதல், சிவதலங்களுக்குச் சென்று திருப்பணிகளை நிறைவேற்றுதல், சிவதீர்த்தங்களிலே நீராடுதல் முதலியனவாம்.

இந்த மூன்றுவகைத் தவங்களுள் தீர்த்தயாத்திரைகள் சிறந்தன. அவைகளுள் கங்கைநதிகளிலும் தனித்தனி நதிகளிலும், நதிகள் எல்லாம் கடலுடன் சங்கமமாகும் சமுத்திரங்களிலும் நீராடுதல் சிறந்தது என்று கூறினார்.

இதனைக் கேட்ட காஞ்சனமாலை, சமுத்திரத்தில் நீராடும் அதிக விருப்புடையவளாய்த் தன்மகள் தடாதகைப்பிராட்டியாருக்குக் கூறினார். பிராட்டியார் தனது கணவனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கிச், "சுவாமி அன்று குண்டோதரரின் பசிப்பிணியும் தாகமும் தீர அன்னக் குழியும் வைகைநதியும் அழைத்தீர்கள். இன்று எனது மாதா சமுத்திர நீராட விரும்புகின்றாள்". என்று விண்ணப்பம் செய்தார். எம்பெருமான் அதற்கிசைந்து ஏழுகடல்களை வரவழைத்தார். அந்த ஏழுகடல்களும் ஏழு வண்ணங்களுடன் வாவியிற் கலந்தன.

## 10. மலையத்துவசனை அழைத்த கதை.

ஏழுகடல்களும் ஏழுவண்ண நிறங்களுடன் கலந்த வாவிக்கரையில் உள்ள நந்தவனத்தில் சுந்தரபாண்டியனும் தடாதகைப்பிராட்டியாரும் சிங்காசனத்தில் எழுந்தருளியிருந்தனர். அப்போது சிவபெருமான் தன்மனைவியை நோக்கி, உன்பொருட்டு ஏழுகடல்களையும் அழைத்து இவ்வாவியில் விட்டோம். இந்த வாவியில் நீராட உமது மாதாவை அழைத்துவாருமென அருளினார். பிராட்டி தனது மாதாவாகிய காஞ்சனமாலையை அழைத்துக் கொண்டு வாவிக்கரையை அடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சிவபுராணங்களையும் கற்று வல்ல சிவபிராமணரை நோக்கிப் புண்ணிய வாவியில் நீராடும் விதிகளைக் கூறுவீர் எனக் கேட்டாள். அவர்கள் இப்புண்ணிய நதியில் நீராடும் போது, தனது கணவனது கை, கணவன் இல்லாதவிடத்து மகனது கை, கணவனும் மகனும் இல்லாதவிடத்து பசுக்கன்றின் வாலில் பிடித்து நீராட வேண்டுமெனக் கூறினார்கள்.

இதனைக் கேட்ட காஞ்சனமாலை தன்மகளை நோக்கி முன் நான் செய்த தவக்குறைவினால் கணவனும் புத்திரனும் இல்லை. இனி நான் பசுவின் கன்றின் வாலைப்பற்றிக் கொண்டல்லவோ நீராட வேண்டுமெனக் கூறினாள். இதனைக் கேட்ட பிராட்டியார், எம்பெருமானிடம் மாதாவின் குறைகளைக் கூறினார்.

எம்பெருமான் சுவர்க்கத்தில் இந்திரனுடன் சிம்மாசனத்திலிருந்த மலையத்துவசன்மேன் கடைக்கண் நோக்குதலும் மலையத்துவசன் சிம்மாசனம் விட்டு விமானத்தில் மேலேறி ஏழ்கடலும் நிரம்பிய வாவிக்கரையில் வந்திறங்கினான். யாராலும் கிடைத்தற்கரிய பரம்பொருளை எனது மனைவியினால் அடையப்பெற்றேனென்று இறைவனை வணங்கிச் சென்றான். எல்லாம் வல்ல சிவபெருமான், "நான் மலையத்துவசனின் மருமகன். மருமகனை மாமன் வணங்குதல் தகாதாகையால் அதனைத் திருக்கரத்தால் தடைசெய்து தழுவி திருவருள் நோக்கம் செய்தார். நீ உன்மனையோடு போய்த் தீர்த்தமாடுவாய்" என்று திருவாய் மலர்ந்தார். பாண்டியனைத் தடாதகைப் பிராட்டி எதிர் வந்து தழுவ, தானும் தழுவி பெருமகிழ்ச்சியடைந்தான். இந்த மகிழ்ச்சி மூலம், மகளின் திருமணத்தில் தான் கலந்துகொள்ளாத கவலையை மறந்தான்.

பின்னர் காஞ்சனமாலை கணவனை நாணத்துடன் வணங்கி, பிராமணரிடம் பவித்திரம் பெற்று கணவனின் கரங்களைப் பற்றி பேருவகையுடன் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்தாள். பின்னர் சிவபெருமானின் திருவருளினால் சிவனின் திருவுருவம் பெற்றனர். சிவனருளால் அப்போது அவ்விடம் விமானம் ஒன்று வந்தது. அதிலேறி, தேவர்கள் கணங்கள் மங்கல ஒலி எழுப்ப சோமசுந்தரர் கோயிலை அணுகித் தங்கள் மகளும் மருமகனும் சிவனும்பார்வதியுமாக வீற்றிருப்பக் கண்டு ஆனந்தம் கொண்டனர். இவ்வாறு இறைவியாகிய பார்வதி எமது மகளாகவரவும் சிவன் மருமகனாகவரவும் எம்போல் யாரும் உலகில் தவம் செய்திலர் என்று மகிழ்ந்தனர்.

இதன்பின்னர் மலையத்துவசனும் காஞ்சனமாலையும் இறையருளால் விமானத்தை அஞ்சல் செய்ய அது புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், சத்தியலோகம், வைகுண்டலோகம் ஆகியவற்றைக் கடந்து சிவலோகத்தையடைந்தார்கள். அதன்பின்னர் தடாதகைப் பிராட்டி சிவபெருமானை வணங்கி அவருடைய அற்புதங்களைப் புகழ்ந்து பாராட்டினாள். நாயகியின் உட்கோளைத் திருவுளம் கொண்டு சிவன் மகிழ்ந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி விசாகம்.

கலாநிதி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள்

விசாக நட்சத்திரத்தினால் பெருமை பெற்றது வைகாசி. இம்மாதத்தை வைகாசி என்றும் கூறுவர். இதனை சோதிநாள் என்றும் போற்றுவர். சோதிப் பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட முருகப் பெருமான் அவதாரம் செய்த திருநாள். அவதாரம் என்பது கீழிறங்கி வருதல் என்ற பொருளில் வழங்குவது. என்றுமுள்ள பிறப்பிறப்பற்ற ஒரு பொருள் உலகத்தை உய்விக்கும் பொருட்டு இறங்கி வருவதனையே அவதாரம் என்கிறோம். தேவர்களின் வேண்டுதலை ஏற்று சிவபெருமான் தமது நெற்றிக் கண்ணினின்றும் முருகனைத் தோற்றுவித்த சம்பவத்தையே கந்தபுராணம் காட்டுகிறது.

"காலமாய்க் கால மின்றி
கருமமாய்க் கரும மின்றி
கோலமாய்க் கோல மின்றி
குணங்களாய்க் குணங்க ளின்றி
ஞாலமாய் ஞால மின்றி
அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இளிந்த வள்ளல்
மூவிரு முகங் கொண் டுற்றான்."

என்பர் கச்சியப்பர்.

தக்கன் பல ஆண்டுகள் கடுந்தவம் செய்தவன். இறைவனருளால் வரங்கள் பல பெற்றான். பின்பு வரங்கொடுத்த இறைவனையே மறந்து யாகத்தைச் செய்தமையினால் பெருந்தண்டனையடைந்தான். சிந்திக்கும் ஆற்றல் இல்லாத ஆட்டின் தலையொன்றைத் தக்கனுக்குப் பொருத்தப் பட்டது. நன்றி மறந்தமையினால் இந்நிலை கிடைத்தது. ஆனால் தேவர்களும் தமக்குத் தலைவன் சிவபெருமானே என்று தெரிந்தும் தட்சனின் அச்சுறுத்தலுக்குப் பயந்து யாகத்தில் கலந்து கொண்டமையால் பல துன்பங்கள் அடைந்தார்கள். இவர்கள் தெரிந்து கொண்டே இத்தவறினைச் செய்தமையால் இவர்களுக்குத் தண்டனையை அசுரர்களிடமிருந்து இறைவன் ஏற்படுத்தினான். சூரபன்மன் ஆகியோரால் துன்பப்பட்ட தேவர்கள் துன்பந் தொலையும் காலம் அண்மியதும் இறைவனிடமே சென்று முறையிட்டு இரந்து நின்றனர்.

"ஆதியும் நடுவும் ஈறும்
அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும்
இன்பமும் துன்ப மின்றி
வேதமுங் கடந்து நின்ற
விமல ஓர் குமரன் றன்னை
நீதரல் வேண்டும் நின்பால்
நின்னையே நிகர்க்க என்றார்."

அவ்வாறே எம்பெருமான் முருகன் உதித்த நாள் இதுவேயாகும். இந்த நாளில் முருகப் பெருமானை வழிபாடு செய்து அவன் நாமத்தை ஆயிரம் முறை ஜெபித்து ஆனந்தமடைவது சைவமக்களின் இன்றியமையாத கடமையாகும் முருகப் பெருமானின் அவதாரத்தால் மகிழ்ந்த தேவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாகனைப் போற்றிய தினத்தை நாமும் இவ்விசாக தினத்தில் நினைவு கூருவோம்.

"கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு
கேசநம நங்கை உமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம
நீபமலர் மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம
சோதிநம நற்பரம னும்
எந்தைநம என்றும் இளை யோய்நம
குமாரநம என்று தொழுதார்."

அருணகிரிநாதரும் எம்பெருமான் முருகனை வழிபடுவோர்க்கு ஒரு தாழ்வுமில்லையே என்று அழகாகப் பாடியுள்ளார். நாமும் பாடி அமைவோம்.

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்
தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாத
வர்க்கொரு தாழ்வில்லையே."

## பசுவினைப் பேணி நலம்பெறுவோம்

பசுவினைப் பேணிந லம்பெறுவீர்
பசுவதை தன்னைவெ றுத்திடுவீர்
தேசுறு தெய்வப் பசுவினையே
தேடியே கொன்றுயிர் புசிக்காதீர்

பசும்புல் தனையே தினமுண்டு
பாலினைத் தந்தெமைக் காத்தொளிரும்
சிசுவின் ஊட்டம் மிகுபேணும்
பசுவே தெய்வம் எனப்படும்

பொய்கொலை களவு மிகுபாவம்
புலால்மது அருந்தல் பெரும்பாவம்
மெய்யினைப் பேணும் வழிநாடி
மேலாம் பசுவைக் கொல்வீரோ?

சுவாமி ஞானப் பிரகாசர்
சூளுரை செய்துயிர் வாழ்ந்தவழி
தவத்தில் மிக்க பெருந்தவமாம்
தாயாம் பசுவைக் கொல்லாதீர்

உடலில் ஊறும் உதிரமதை
உண்ணத் தகுந்த பாலாகக்
கூட நல்கும் பசுவினையே
கொன்றுயிர் புசித்தல் முறையாமோ?

பால்தயிர் நெய்மோர் கோசலமும்
பசுவெண் ணீறு கோமயமும்
செல்வம ளிக்கும் இதன்பெருமை
அறியா தழிவு செய்வீரோ?

இந்திரன் முதலாம் தேவர்களும்
இனிய பெரிய முனிவர்களும்
சுந்தரன் நான்முகன் நாரணியும்
துலங்கும் பசுவினை பேணிடுவீர்

ஆண்டவன் மேனியைக் குளிர்விக்கும்
அமுதாம் பஞ்ச கௌவியமும்
எண்ணம் போலத் தினம் நல்கும்
பசுவினைப் பேணி வளர்த்திடுவீர்

பச்சிலை பசும்புல் நீருண்டு
பணிவுற வாழ்ந்தே இதமாக
இச்சையு றத்தினம் இறையடிக்கே
ஈயும் கொடையறிந் துய்ந்திடுவீர்

கோமா தாயிவள் புகழ்பாடும்
கோகுலக் கண்ணின் அடிநாடும்
தாமதம் இன்றியே இவளடியை
தொழுதே வினைகள் அறுப்பீரே

கவியாக்கம்: சு.குகதேவன், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியும் தரமோ?

திரு. க.சிவசங்கரநாதன் அவர்கள்

சமாதானநீதிபதி

ஏதேனும் ஒரு பொருள் ஒரு குறிப்பிட்ட தன்மையை உடையது என்றால் நமக்கு விளங்குகிறது நீர் ஓடுகிறது என்று சொல்கிறோம். ஓடுவதைப் பார்க்கிறோம். அது ஆவியாக மாறிவிட்டால் அதன் இயல்பு மாறுகிறது. பனிக்கட்டியாக உறைந்து போனால் அதன் இயல்பு வேறுபடுகிறது. ஆதலின் ஒரு பொருள் வெவ்வேறு நிலையில் வெவ்வேறு இயல்புகளைப் பெறுகிறது என்று சொல்லலாம். அப்படியே சிலவகைப் பொருள்கள் இடவேறுபாட்டால் வேறுபட்ட இயல்புகளைப் பெறலாம். வெப்பமான நிலப்பகுதிகளில் மலருக்கு மணம் இருக்கிறது. மிக்க குளிர்ச்சியான பகுதிகளில் மலருக்கு மணம் இருப்பதில்லை. சென்னையில் இருக்கிறது. இது இடத்தினால் உண்டான வேறுபாடு. ஒரே இடத்தில் ஒரே காலத்தில் இரண்டு வேறுபட்ட இயல்புகளை ஒரே பொருளுக்கு இருக்கும் என்று சொல்ல இயலாது. அப்படி இருக்க முடியாது. இது அறிவுக்கு நன்றாகப் புலனாகும் உண்மை.

ஆனால் இறைவனுடைய இயல்பைப்பற்றி வேதசாத்திரங்களும் பெரு மக்களும் சொல்பவற்றைப் பார்த்தால் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டனவாகத் தோன்றுகின்றன. கடவுள் எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் நிரம்பியிருக்கிறான் அவன் இல்லாத இடம் இல்லை. அவன் இல்லாத காலம் இல்லை. இவற்றையாரும் மறுப்பதில்லை. அவனுடைய இயல்புகளைப்பற்றி இதுபோலவே உறுதியாக ஒரு நீர்மையாக யாவரும் சொல்வதில்லையே. இறைவன் உருவுடையவன் என்று சைவ வைணவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அவன் உருவமுடையவன் அல்லன் அவன் நிலை உரு அன்று என்று சிலர் சொல்கிறார்கள். அப்படியானால் அவன் அருவமுடையவன் தானா?அரு அன்று என்று சொல்கிறார்கள். அவன் உள்ள பொருள் இதில் ஐயம் இல்லை. ஆனால் உள்ளனவாக நாம் உணரும் பொருளாஅவன்? இல்லை அப்படியானால் அவன் இல்லாத பொருளா? அதுவும் அன்று அவன் இருளா? அன்று பின்னே ஒளியா? அன்று இருளும் அன்று ஒளியும் அன்று என்றால் ஒன்றனோடு ஒன்று முரண்படவில்லையா? அவன் நிற்கும் நிலை இன்னதென்று சுட்டிக்காட்ட ஒண்ணாதது. வருணிக்க இயலாதது. நினைக்கவும் இயலாதது. அப்படியானால் எப்படித்தான் அவனைச் சொல்வது? வேதம் இறைவனை இவன் இன்னான் என்று சுட்டிக்காட்டுவதில்லை. ஈது அல்லன் என்று நாம் அறியும் ஒவ்வொரு பொருளையும் விலக்கிக் கொண்டே செல்கிறது.

**"அல்லையீ தல்லையீ தென்றரு மறைகளும் அன்னகச்**
**சொல்லினால்துதித் தினைக்கும் இச் சுந்தரன்."**

என்று பரம்சோதியார் கூறுவார். இது அல்லன் அது அல்லன் என்று அன்மைச் சொல்லினால் சொல்கிறதாம். இது அன்று என்ற பொருளில் ந இதி (நேதி) என்று வடமொழியில் சொல்வர். நேதிகளைந்து பார்க்கவேண்டுமென்பார்கள் தள்ளுவதைத் தள்ளி நிற்பதை நாமே உணர்ந்து அனுபவிக்கவேண்டுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி அன்று என்று சொல்லும் வகையில் இறைவன் நிற்கிறான் என்ற உண்மையை அறிவாராய்ச்சியினால் தெளிய முடியாது. ஒரே சமயத்தில் ஒன்றோடு ஒன்று மாறுபட்ட நிலையில் ஒரு பொருள் நிற்கிறது என்பதே பகுத்தறிவுக்கு விளங்காத கருத்து அறிவுலகத்திலே இப்படி ஒன்று இராது என்று சொல்லத்தக்க நிலையே அநுபவ உலகத்தில் உண்டு என்று தெளிவாகும். கண்ணுக்குத் தெரியாமல் நெடுந்தூரத்தில் உள்ள பொருளைப் பற்றிப் பேசும் போது என் கண்ணுக்குப் புலனாகவில்லை என்று சொல்வது தான் முறை. என் கண்ணுக்குத் தெரியாமையால் அப்படி ஒரு பொருள் இல்லை என்று சொல்வது முறையன்று. அதைப் போலவே நம் அறிவுக்குப் புலனாகாத ஒன்றை இல்லை என்று சொல்வதை விட இது என் அறிவுக்கு அப்பாற்பட்டது என்று சொல்வதே முறை. இல்லை என்றே சொல்லவேண்டுமானால் அதை அறியும் திறமை என் அறிவுக்கு இல்லை என்று சொல்லலாம். அல்லது என் அறிவுலகத்தில் அது இல்லை என்று சொல்லலாம்.

எல்லோருக்கும் எல்லாம் தெரிந்து விடுகிறதா? சிறுவகுப்பில் படிக்கும் பிள்ளைக்குத் தெரியாத பல விஷயங்கள் மேல் வகுப்பில் படிக்கும் பிள்ளைக்குத் தெரிகிறது. அறிவுக்கு இது தான் எல்லை என்று ஒருவரையறை இல்லை. ஆகவே அறிவினால் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளமுடியாது என்று உணரவேண்டும். அவற்றை அறியும் தரம் அறிவுக்கு இல்லை.

**உரு அன்று அரு அன்று உளது அன்று இலது அன்று**
**இருள் அன்று ஒளி அன்று என நின்றதுவே.......**
***அறியும் தரமோ?*** என்று அருணகிரிநாதர் கேட்கிறார்.

எனவே இறைவனை ஆராய்ச்சி செய்வதை தவிர்த்து எமக்கு மேற்பட்ட சக்தியே இறைவன். அவன் திருவருளால் உலகம் இயங்குகின்றது என்ற உண்மையை சமயகுரவர்களின் வாழ்க்கை வரலாறுகள் மூலம் உணர்கிறோம். இதை இன்றைய சமூகம் இன்றைய தேவைகளை உணர்ந்து ஆலயவழிபாட்டிலும் சமயநெறியிலும் நின்று செயற்பட்டால் சிறப்பான வாழ்வு அமையும்.

**சிறுதகவல்கள்:**

1. முருகனுக்குக் கார்த்திகேயன் என்று ஒரு பெயர் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் அந்த ஆறு கார்த்திகைப்பெண்களின் பெயர்கள் வருமாறு: அம்பா, துவா, நிகர்த்தினி, அப்ரகேந்தி, மேகேந்தி, வர்ஷயேந்தி

2. ஒரு புறாவுக்காகத் தன் உடலையே தானம் செய்தவர் சிபிச்சக்கரவர்த்தி சிவபெருமானுக்குக் கண்தானம் செய்தவர் கண்ணப்பர். இந்திரனுக்காகத் தன் முதுகு எலும்பைத் தானம் செய்தவர் தசீசி முனிவர்.

3. வெள்ளெருக்கம் வேர் கொடிய சர்ப்ப விஷத்தை நீக்கும். வெள்ளெருக்கு வேரில் செய்த விநாயகரை வணங்கினால் சகல நன்மையும் கிடைக்கும்.

4. முருகன் சிருஷ்டித்தொழில் செய்யும் கோலம் பிரம்ம சாஸ்தா எனப்படும். பிரம்மனைச் சிறையில் அடைத்த முருகன் பிரம்மன் சிறை நீங்குமளவும் தாமே பிரம்மனாக அமர்ந்து உயிர்களைச் சிருஷ்டித்தார்.

5. முருகனை அறுமுகச்சிவம் என்பார்கள். முழுமையான சதாசிவ மூர்த்தியின் அம்சமே முருகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்துக்கல்லூரி விடுதி வாழ்க்கை– ஒரு பார்வை

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

யாழ் இந்துக்கல்லூரி விடுதி வாழ்க்கையை அனுபவித்தவர்களுக்கு அது என்றும் மனதை விட்டு நீங்காத பசுமை நினைவுகளாகவே இருக்கும். திரு. கே. எஸ். சுப்பிரமணியமும் (K.S.S.) திரு. எஸ். நமசிவாயமும் (நவசியர்) முறையே விடுதி அதிபராகவும், விடுதி உபஅதிபராகவும் இருந்த காலத்தில் விடுதியில் வாழ்ந்தவர்களுக்கு இவர்கள் இருவரைப்பற்றியும் குறிப்பாக K.S.S. பற்றி நினைவு கூருவதும், விடுதி வாழ்க்கை மற்றும் இவர்களது நற்பண்புகள், நிர்வாகத்திறமைகள், இவர்களிடம் தாம் பெற்ற அறிவுரைகள், தண்டனைகள் பற்றி தம் நண்பர்களுடன் உரையாடுவதும் தம் குடும்ப அங்கத் தவர்களுக்கு சொல்லி மகிழ்வதும் ஓர் இனிய அனுபவம். கட்டுரை ஆசிரியர் விடுதியில் ஏழு வருடங்களும் இவரது சகோதரர்கள் அறுவர் 1940களின் பிற்பகுதியிலிருந்து 1970களின் முற்பகுதி வரை ஒருவர்பின் ஒருவராகவும் கூட்டாகவும் விடுதியில் தொடர்ச்சியாக வாழ்ந்துள்ளனர். இதனால் தான் பெற்ற விடுதி வாழ்க்கையின் நினைவுகளை இப்பொழுது மீட்டுப் பார்ப்பது மனநிறைவாகவுள்ளது. திரு. கே. எஸ். எஸ் மறைந்து ஆண்டுகள் பலவாகியும் இன்றும் இவர் யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களின் குறிப்பாக விடுதி மாணவர்களின் நினைவில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

1970களின் முற்பகுதியில், இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பல கல்லூரிகளில் விடுதிகள் செயலிழந்தமை பெரும் கவலைக்குரியது. அன்று ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடு, பல்கலைக்கழக அனுமதியில் மாவட்டக் கோட்டா, இனப்பிரச்சினை விடுதலைப் போராட்டத்தில் மாணவர் பங்கு, இராணுவக்கெடுபிடி, ரியுசன் முறை வளர்ச்சி, பிரதேசப்பாடசாலைகளின் வளர்ச்சி, போன்ற இன்னோரன்ன காரணங்களால் கல்லூரிகளின் விடுதிகளுக்கு மூடுவிழா நடைபெற்றது. பல ஆண்டுகளின் பின்னர் இன்று சில கல்லூரிகள் மீளவும் விடுதிகளைத் தொடங்கினாலும் விடுதிகளில் மிகச்சிறிய எண்ணிக்கையான மாணவர்களே இருப்பதுடன், வெளி உதவிகள் இல்லாமல் முன்னர் போல் விடுதிகளைத் தனித்து நடத்துவது சிரமமாகவுள்ளது. அன்று விடுதிகளில் பெரும் எண்ணிக்கையான மாணவர்களை வைத்து, வெளி விடுதிகளின்றி, தனித்து மிகச்சிறப்பாக நடத்தியிருப்பது பெருமைக்குரியது. திரு. கே. எஸ். எஸ். போன்ற சிறந்த விடுதி முகாமையாளர்களின் செயற்றிறன் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

யாழ் இந்துக்கல்லூரி விடுதி 1940, 50, 60களில் மிகச்சிறப்புற இயங்கி வந்தது. கல்லூரி மாணவர் தொகையில் மூன்றிலொரு பங்கினர் விடுதி மாணவர்களாக இருந்தனர்.அன்று கிராமப்புறப் பாடசாலைகள் வளர்ச்சி பெற்றிருக் காததால் வசதியும் கல்வி விழுமியமும் கொண்ட கிராமத்துப் பெற்றோர் பலர் தம் பிள்ளைகளை நகர்க்கல்லூரி விடுதிகளில் தங்கவைத்துக் கற்பித்தனர். இந்துக்கல்லூரியில் நாடு தழுவிய ரீதியாக மாணவர்கள் பலர் விடுதியில் தங்கியிருந்து கற்றனர். சைவ தமிழ்ப்பிள்ளைகளே கூடுதலாக இருந்தனர். 1940களில் அன்றைய கல்வி அமைச்சர் திரு. C. W. W. கன்னங்கரா அவர்களால் நாடு தழுவிய ரீதியில் விடுதிகளுடன் கூடிய மத்திய மத்தியமகா வித்தியால யங்கள் அமைக்கப்பட்டன. இச்செயற்பாடு ஏனைய கல்லூரிகளுக்கும் மாணவ விடுதிகளை அமைப்பதற்குத் தூண்டுதலாக இருந்தது. மாணவ விடுதி முறை மாணவர்களின் கல்விக்கு, குறிப்பாக கிராமிய பின்தங்கிய சமூகப் பிள்ளைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி முன்னேற்றத்திற்குப் பெரும் உறுதுணையாக விளங்கியது. இன்று கல்வி வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் பல காரணிகளுள் ஒன்று கல்லூரி விடுதிகள் இன்மையே.

யாழ் இந்துக்கல்லூரி விடுதி, 1940, 50களில் மூன்று இடங்களில் இயங்கி 60களில் பிரதான கல்லூரி வளாகத்துக்குள் இயங்கியது. 1960களுக்கு முன் இயங்கிய விடுதிகளாவன கல்லூரி வளவில் இருந்த மாடி விடுதி, இதில் கீழ்மாடி, மேல்மாடி, விறாந்தை (wingdormitory) என மூன்று பிரிவுகள் உள. இரண்டாவது விடுதி, அன்றைய விடுதி அதிபர் திரு.கே.எஸ்.எஸ்.இன் வீட்டிற்குப் பின்புறமாக பசுபதிச் செட்டியார் வீட்டில் இருந்த Babyhostel. மூன்றாவது விடுதி, காங்கேசன்துறை வீதியில் சிவதொண்டன் நிலையத்திற்கு எதிராக இருந்த செட்டியார் விடுதி.

1950களின் பிற்பகுதிகளில் பழைய மாடி விடுதி மண்டபத்துடன் இணைந்து புதிய இருமாடி விடுதி அமைக்கப்பட்டது. இதில் கீழ்மாடி, உணவு மண்டபமாக விளங்கியது. இத்துடன் சமையலறைகள், குளிப்பறைகள், நீர்த்தாங்கி ஆகியனவும் அமைக்கப்பட்டு விடுதி புதுப்பொலிவு பெற்று விளங்கியது. இப்புதிய விடுதி அமைப்பின் பின்னர் வெளியே இருந்த விடுதிகள் மூடப்பட்டு விடுதி மாணவர்கள் யாவரும் புதிய விடுதிக்குள் அனுமதிக்கப்பட்டனர். புதிய விடுதி அமைப்பில் திரு. கே. எஸ். எஸ். அவர்கள் மிகப்பெரும் பங்காற்றினார்.

யாழ் இந்துக்கல்லூரி விடுதி வாழ்வு பல வழிகளில் தனித்தன்மை பெற்றது. மாணவர்களின் செயற்பாடுகள், உணவு, படிப்பு, விளையாட்டு, மாணவர் நலச்செயற்பாடு, விடுதி அதிபரின் மேற்பார்வை என்பன விசேட கவனத்திற்குரியன.

### விடுதி வாழ்வும் நேர ஒழுங்குகளும்.

விடுதி மாணவர்கள் காலை 5-00 மணிக்கு முன்னரே எழுந்து விடுவார்கள். 6-00 மணிக்கு கோப்பி தொடர்ந்து காலைப்படிப்பு 7.15க்குக் குளிப்பு, 7.45க்கு காலை உணவு 8.30க்கு வகுப்புச் செல்லல் 9-00 மணிக்கு விடுதி மண்டபங்கள் பூட்டப்படும் 12.45க்கு மதிய உணவு முதற்பந்தி, 1.15க்கு மதிய உணவு இரண்டாவது பந்தி, 1.45க்கு மாலை வகுப்புக்கள் ஆரம்பம். 3.45க்கு வகுப்புக்கள் முடிந்து விடுதி திரும்பல் 4-00 மணிக்கு தேநீர் 4.30-6.30 வரை விளையாட்டு 6.30க்கு முதற்காலப்படிப்பு 8-00 மணிக்கு இரவு உணவு, 8.30க்கு இரண்டாம் காலப்படிப்பு ஏழாம்வகுப்பிற்கு மேற்பட்டவர்களுக்கு, 9.30-11.00 வரை மூன்றாம் காலப்படிப்பு மேல்வகுப்பினருக்கு பரீட்சைக்காலங்களில் மாத்திரம், பிரதான விடுதி வாசலில் சிறிய தண்டவாளத்துண்டு கட்டுப்பட்டு இருந்தது. இதுவே விடுதி மணி. நேரத்தை மையமாகக்கொண்டு விடுதி வாழ்க்கை சுழன்று கொண்டிருக்கும். உபஅதிபர் திரு. நமசிவாயகம் பெரிய திறப்புக் கோர்வையுடன் உணவு மண்டபத்தில் நின்று மேற்பார்வை செய்வார். திரு.கே.எஸ்.எஸ். இடையிடையே வந்து மேற்பார்வை செய்வார் விடுதி மாணவதலைவர்களின் கடமைகளில் நேரக்கண்காணிப்பு முக்கிய இடத்தை பெற்றிருந்தது. மாணவர்களின் சிறு குற்றங்களுக்கு கண்டிப்பு, காதுமுறுக்கல், சிறுகுட்டு, தண்டனையாக இவர்களால் வழங்கப்படும். திரு கே. எஸ். எஸ். மாத்திரம் குற்றங்களுக்கு பிரம்படி வழங்குவார்.

### குளிப்பு (ஸ்நானம்)

விடுதி வாழ்க்கையில் தினசரிக் குளிப்பு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. படிக்காமல் இருக்கும் மாணவர்களைப் பார்த்து திரு. கே. எஸ். எஸ். “சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஸ்நானம், போசனம், சயனத்துடனும் சிலர் ஸ்நானம் இன்றி போசனம், சயனத்துடன் மட்டும் இருக்கிறார்கள்". என நகைச்சுவையாகக் கூறிக்கண்டிப்பார். மாணவர்களின் குளிப்பை மேற்பார்வை செய்ய சிரேட மாணவர்களிடமிருந்து மோட்டர் மேற்பார்வையாளர் நியமிக்கப்படுவார்கள். இவர்களுள் சிறப்பாக கடமையாற்றுபவர்கள் பின்னர் விடுதி மாணவத்தலைவர்களாக நியமிக்கப் படுவார்கள். குளிப்பறையில் ஒரே நேரத்தில் 15 பேர் குளிக்கும் வசதி உண்டு. எனினும் எல்லாக்குழாய்களிலும் ஒரே அளவு நீர் வருவதில்லை. இதனால் கூடுதலான நீர்வரும் குழாய்களைப் பிடிப்பதில் மாணவரிடையே போட்டி ஏற்படும். மோட்டர் மேற்பார்வையாளர் மாணவர்களை நிரைப்படுத்தி 15 பேராகக் குளிக்க அனுப்புவார். முதல் விசில் ஒலியுடன் 15 பேர் ஓடி குளிக்கஇடம் எடுப்பர். குழாய்த் தெரிவில் மாணவரிடையே மனநிறைவும் குறைவும் ஏற்படும். இரண்டாம் விசில் ஒலியுடன் முதல் அணி சவர்க்காரம் போட, இரண்டாவது அணி குளிக்கத் தொடங்கும். மூன்றாம் விசில் ஒலியுடன் முதல் அணி மீளவும் குளிக்க, இரண்டாம் அணி சவர்க்காரத்துடன் நிற்கும். நான்காம் விசிலுடன் முதல் அணி குளிப்பு நிறைவடையும். இதுவே குளிப்பு ஒழுங்கு. குளிக்க வந்த யாவரும் குளித்து முடிவடையும் வரை இவ்வொழுங்கு தொடரும். சிரேட மாணவர் கடைசியாகக் குளிப்பர். சனிக்கிழமைகளில் நல்லெண்ணெய் முழுக்கு ஒழுங்கு நடைபெறும். யாவருக்கும் நல்லெண்ணெயும் அவித்த சிகைக்காயும் வழங்கப்படும். மாணவர்கள் தலை, உடம்பு முழுவதும் எண்ணெய் பூசி ஊறவிட்டு விடுதிச்சுற்றாடல்களில் திரிந்து பின் முழுகுவார்கள். சனிக்கிழமை முழுக்கு பெரிய எடுப்பாக நடைபெறும். திரு.கே.எஸ்.எஸ்.உம் நவசியரும் மேற்பார்வை செய்வார்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர்களுக்கு முடி வெட்டுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். இதற்கான பற்றுச்சீட்டை மாணவர்கள் விடுதி உபஅதிபரிடம் ஏற்கனவே பெற்றிருக்க வேண்டும். கல்லூரிச் சிகையலங்காரன் கல்லூரியுடன் மிகநீண்ட காலமாகப் பணிசெய்தமையால் கல்லூரியின் பழைய கதைகளை முடி வெட்டும் மாணவர்களுக்கு நிறைவாகக் கூறுவார். விடுதி சலவைப்பணியாளர் கல்லூரி விடுதிக்கு ஒழுங்காக வந்து பணியாற்றுவார். இவர்களது பரம்பரை சங்கிலி மன்னருக்கே சலவைப்பணி செய்திருந்ததாக குறிப்பிடுவார். ஒழுங்காக சலவைப்பணி நடைபெற்றதால் மாணவர்களுக்கு சலவை வேலை இருக்கவில்லை. குளித்த ஈர உடுப்புகளை மாத்திரம் தோய்த்துக் காயவிடுவர். உணவு மண்டபத்தில் வானொலி மாணவர் பாவனைக்கு அலுமாரிக்குள் வைத்து பூட்டப்பட்டிருந்தது. அந்த வானொலியை இயக்குவதற்கு காலத்துக்குக் காலம் ஒருவர் நியமிக்கப்பட்டு அவரது பொறுப்பில் விடப்பட்டது. வானொலி கேட்பவர்கள் மண்டபத்தில் அமைதி காத்து கேட்க வேண்டும் என்பது நியதி.

**படுக்கை (சயனம்)**

விடுதி மாணவர்களுக்கு இரும்புக் காலில் நிற்கும் மரப்பலகைக் கட்டில்கள் வழங்கப்பட்டிருந்தன. இலகுவாக அரக்கிக் கொள்ளலாம். இரு கட்டில் களுக்கிடையில் முன்னும் பின்னும் அறை கொண்ட சிறிய அரை அலுமாரிகள் இருக்கும். இவற்றுள் மாணவர் தம் புத்தகம், எழுத்துத் திரவியங்களை வைத் திருப்பர். மேல்தட்டில் ஒருபகுதி இறைவணக்கத்திற்குரிய படங்களைக் கொண்ட பகுதியாக வைத்திருப்பர். இந்த அலுமாரிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் உடுப்புப் போடும் இறாக்கை இருக்கும். இதுவே முன்பின்னாக இருக்கும் கட்டில்களுக்கிடையேயுள்ள மறைப்பாகும். மாணவர்கள் யாவரும் தம் இறங்குப் பெட்டிகளுக்குள் தம் உடுப்பு உடமைகளை வைத்திருந்தனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறவழி ஒழுகுவோம்.

என்.சோமகாந்தன் அவர்கள்

அதிகாலை வேளை பறவை இனங்கள் புளகாங்கித கானம் இசைக்கின்றன. மொட்டுகள் கட்டவிழ் மலராக நறுமணம் பரப்புகின்றன. ஆலயங்களில் சுப்ரபாதம் பக்தி இசையோடு எழுந்து மனங்களைக் கவ்வுகின்றது.

மாதா கோவிலின் மணி இனிய நாதத்தை ஒலிக்கின்றது.
பன்சலைகளிலிருந்தும் விகாரைகளிலிருந்தும் எழும் பிரித் ஒலி காற்றில் மிதக்கின்றது.
பள்ளிவாசல்களிலிருந்து பாங்கொலி குரல் எழுப்பித் தொழுகைக்காக அழைக்கிறது.

சூரியக் குழந்தை கண் விழித்து விட்ட போதிலும் இன்னும் படுக்கையை விட்டெழ மனமின்மையால் சோம்பல் முறித்துக் கொண்டிருந்தான். ஆனால் பாடசாலைக்குச் செல்லும் எட்டாம் வகுப்பு படிக்கும் அக்காவும், இரண்டாம் தரம் படிக்கும் அவளின் தம்பியும் எழுந்து அவர்கள் வீட்டு முற்றத்திலுள்ள சிறிய நீர்த் தொட்டியில் முகம் கழுவிக் கொண்டிருந்தனர். அப்போது பின்னிரவுப் பிறைச் சந்திரன் குளிர் நிலவை அள்ளித் தெளித்தவாறு மேல் வானத்தில் தவழ்ந்து கொண்டிருந்தான்.

வேலைக்குச் செல்ல வேண்டிய கணவருக்கும் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய பிள்ளைகளுக்கும் கொடுத்து அனுப்புவதற்காக இல்லத்தலைவி சமையலைத் தொடங்கி விட்டாள்.

அவர்களின் தந்தை பத்திரிகையும், பாலும் வாங்குவதற்காக அவசரமாக வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

"அம்மா, அக்கா! ஔவைப்பாட்டி இண்டைக்கும் ஆகாயத்து நிலாவிலே இருக்கிறா முகம் கழுவுகிற போது நான் பார்த்தேன்" அந்தச் சிறுவனின் முகத்தில் அதைக் கண்டுபிடித்த மகிழ்ச்சி மலர்ச்சிச் சிரிப்பு!

சந்திரனில் மனிதன் காலடி வைத்துப் பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைச் சாதித்து விட்ட போதிலும், மழலைகளின் மனங்களில் காலங்காலமாக இந்த நம்பிக்கை மறையவேயில்லை!

"சரி,சரி,சத்தம் போடாதை உன் பாடங்களைப்படி" அவனின் அக்காவுக்கு தனது புலனை பரீட்சைக்கான பாடங்களைப் படிக்க வேண்டுமென்ற அங்கலாய்ப்பு. தம்பியை அடக்கிவிட்டு, தனது புத்தகங்களில் மனதைப் பதிக்கிறாள்.

ஔவைப் பாட்டியைப் பார்த்த மகிழ்ச்சியில் தம்பிக்கும் ஆத்திசூடிப்பாடம் நினைவுக்கு வந்து விட்டது.

"அறஞ் செய்ய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈகை விலக்கேல். என்று மெல்லவாக நெட்டுருப் போடத்துவங்கி விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென அவனுக்கு ஒரு சந்தேகம் எழுந்து விட்டது. “அறம் என்றால் என்ன?” அம்மாவைக் கேட்டு சமையலைக் குழப்ப விரும்பவில்லை. அக்காவைக் கேட்டால் பாய்வாள். பாடசாலை ஆசிரியரிடம் கேட்டு விளக்கம் பெறலாம் என எண்ணிக் கொண்டு அப்போதைக்கு ஆறுதலாகி விட்டான்.

பொழுது வெளிக்கத் தொடங்கியதும், இருவரும் புத்தகங்களை மூடிவிட்டு, எழுந்து சென்று குளித்து, வீட்டில் சுவாமி அறையில் உள்ள தெய்வப் படங்களைக் கும்பிட்டு விட்டு காலை உணவருந்திய பின் பாடசாலைச் சீருடைகளை அணிந்து கொண்டு, புத்தகப்பைகளுடன் புறப்பட்டு விட்டனர்.

“தெருவைக் கவனமாகப் பார்த்து ஓரமாக நடந்து போகவேணும் பிள்ளை. தம்பியைக் கவனமாகக் கையில் பிடித்துக் கொண்டு போ பிள்ளை” பெற்றோர். கரிசனையாகக் கூறி இருவரையும் வழியனுப்பி வைத்தனர். அவர்களின் பாடசாலை சுமார் 10 நிமிட நடைத் தூரத்தில் இருக்கிறது.

வழியில் வரதராஜ விநாயகர் கோவில்; கம்பீரமான இராஜ கோபுரம்; அதில் வண்ணமயமான சிற்பங்கள். அருகில் உள்ள புராதன அரசமரத்தின் கிளைகளிலுள்ள இலைகள் இதமான காற்றில் அசைந்து கொண்டிருந்தன. பக்கத்திலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் மணி “விநாயகப் பெருமானே, விநாயகப் பெருமானே” என ஒலிப்பது போலிருந்தது. பூஜை வேளை: கோவில் பக்தர்களால் நிறைந்திருந்தது. எனினும், சப்பாத்து, காலுறைகளை களைந்து உள்ளே சென்று தரிசிக்க அச்சிறுவர்களுக்கு நேரம் போதாது. பாடசாலையைச் சென்றடைய நேரமாகி விடும். ஆனால் கற்பூர ஜோதியில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானை வெளி வீதியில் நின்று தரிசித்து விட்டுப் புறப்பட்டனர். எனினும் வெள்ளிக்கிழமை மாலைகளில் பெற்றோருடன் வந்துகும்பிட அவர்கள் தவறுவதில்லை.

பாடசாலைக்குள் அவர்கள் கால் வைத்தபோதே, பிரார்த்தனை மண்டபத்தில் ஒன்று கூடுமாறு அழைக்கும் மணி ஒலித்தது. புத்தகப் பையைத் தத்தம் வகுப்புகளில் வைத்துவிட்டு, வகுப்புரீதியாக மாணவர்களுடன் இணைந்து மண்டபத்துக்குச் சென்றனர்.

அங்கே தேவாரம், புராணம் ஓதப்பட்டபின், தினமும் நற்பண்புகளைப் பற்றி அதிபர் அல்லது ஆசிரியர் ஒருவர் சில விளக்கங்களைக் கூறுவது வழக்கம்.

அன்று அறத்தைப் பற்றி அந்த ஆசிரியர் விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார்.

“எமது வாழ்க்கையில் அப்படி கடைப்பபடித்து ஒழுகுவதிலும் மேலானது எதுவுமேயில்லை. அது நமக்கு பக்திகளையும் செல்வங்களையும் தருகின்ற சக்தி கொண்டது. மனதிலே அழுக்குகளை வைத்துக் கொண்டு, வெளியே நல்ல பிள்ளைகளைப் போல் நடிப்பதும், பிறருக்கு உதவுகிறோம் என்று புரிகிறோம் என அள்ளிக் கொடுப்பதும் அல்ல, நல்லனவற்றைச் சிந்திக்க வேண்டும். நல்லனவற்றைப் பேச வேண்டும். நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும. நல்லவை மூலமாக மனதைத் தூய்மையானதாக வைத்திருக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை ஒருவரை மகிழ வைப்பதற்கும், அதே போல் துன்பத்தில் துவழ வைப்பதற்கும் சொற்கள் பயன்படுத்த முடியும். மற்றவர்களிடமும் நம்மிடமும் மகிழ்ச்சியும், உற்சாகமும், சாந்தமும், அமைதியும் ஏற்படுவதனால் இனிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும். தமிழில் எவ்வளவோ இனிமையான சொற்கள் இருக்கின்ற போதும், நாம் எதற்காக அவர்களின் உள்ளங்களைக் காயப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். இதமான இனிய சொற்களை நாம் பேச வேண்டும். மங்களச் சொற்களின் மகிமையினால் நல்ல வளமும் ஏற்படும். இனிப்பான மாம்பழங்கள் மரத்தில் தொங்கும் போது, புளிப்பான மாங்காய்களைப் பறித்துச் சுவைக்க முயலக்கூடாது.

மற்றவர்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படக் கூடாது. அவர்களை நல்லவர்களாக வளர்வதற்கு, நேர்மையான வழியிலும் விடாமுயற்சியுடன் ஈடுபடவேண்டும். கெட்ட வழியால் உயர்ந்து விட ஆசைப்படக் கூடாது. எதைக் கண்டும் சினமுற்று, கோபத்தால் பொங்கி எழக் கூடாது. கோபத்தில் செய்யும் எச்செயலும் கேட்டையே விளைவிக்கும். கோபம் ஒருவனின் இதயத்தையே தாக்கி அவனை அழித்துவிடும். இவற்றையே திருக்குறள் "அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்"

என அறம் என்பதற்கு வரைவிலக்கணம் வகுத்துள்ளார். தமிழின் முதற் புலவர் வள்ளுவப் பெருமான்.

இன்பமும் மகிழ்ச்சியும் ஒருவனுக்கு தாமாகவே வந்துவிட மாட்டா. அறப்பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகினாலேயே அவை சாத்தியமாகும்.

ஏனைய உயிர்களையும் எமது உயிரைப் போன்று மதித்து அன்பு பாராட்ட வேண்டும். எமது சொந்த நன்மைகளை மட்டுமே எப்போதும் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருக்காமல், பிறரின் நன்மைகளையும் நாம் நாடவேண்டும். அவர்களுக்குத் துன்பங்களைக் கொடுக்கக் கூடாது. மாறாக, கைமாறு எதுவும் கருதாமல் உதவிகளைச் செய்ய வேண்டும். முக்கியமாக ஏழைகளுக்கு, இல்லாதவர்களுக்கு எம்மாலானதைக் கொடுப்பது புண்ணியமாகும்.

அடக்கமும், பணிவும், மாணவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் அவசியமானவை, ஒழுக்கத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்பதன் மூலமாகவே, உயர்ந்த சமுதாயம் உருவாக முடியும். ஒழுக்கத்தை கடைப்பிடிக்காததன் காரணமாக சமுதாயத்திற் பல ஒழுங்கீனங்கள், வன்முறைகள், கொலைகள், கொள்ளைகள், களவுகள், பொருள் அபகரிப்புகள் தலையெடுத்துள்ளன. நாள் தோறும், அறத்துக்கு முரணான இக்கொடுஞ் செயல்கள் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. நல்லொழுக்கமுள்ள பிரஜைகளின் எண்ணிக்கை பெருகினால், அமைதியான நல்ல சமுதாயம் உருவாக முடியும்.

எமது உடல்களை வளர்த்துக் கொள்வதற்காக, எம்மில் பலர் ஆடு, மாடு, கோழி முதலியவற்றைக் கொலை செய்து அவற்றின் இறைச்சிகளை உண்பது மிகவும் கொடிய பாவச் செயல், புலாலுணவுகளிலும் பார்க்க, தாவர உணவே சிறந்ததெனவும், நோய்கள் வராமல் தடுக்கும் சக்திகளைக் கொண்டதெனவும் மருத்துவ விஞ்ஞானிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ப விஷயங்களுக்குக் கூட, நம்மில் பலர் எடுத்த எடுப்பில் பொய் கூறுவதைக் காணமுடிகிறது. எத்தனையோ இடர்கள் வந்த போதிலும் அரிச் சந்திரன் என்ற அரசன் பொய் கூறாமல் இருந்தமைக்காக இறையருள் பெற்று இன்பப் பெருவாழ்வு பெற்று வரலாற்றில் சத்தியத்துக்கு உதாரணமாகச் சுட்டிக் காண்பிக்கப்படுவதை உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். பொய் கூறுவது பாவமானது, வெட்ககரமானது, அதனாலேயே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் "பொய் சொல்லக் கூடாது பாப்பா என்றும் புறஞ் சொல்லலாகாது பாப்பா" எனச் சிறுவர் மனங்களில் கூட, அழுத்தமாகப் பதியும் வண்ணம் எடுத்துக் கூறி யுள்ளார். அதனால் எவரும், ஒரு போதும் பொய்யே பேசக்கூடாது.

"பிள்ளைகளே! அடுத்த வகுப்பு ஆரம்பிப்பதற்கு நேரமாகிவிட்டதால், மற்றொரு சந்தர்ப்பத்தில் அறத்தின் பெருமைகளைப் பற்றி இன்னும் பலவற்றை எடுத்துக் கூறுவேன்".

ஆசிரியர் தனது பேச்சை முடித்துக் கொண்டவுடன், மாணவர்கள் தமது வகுப்புகளை நோக்கிச் சென்றனர்.

அச்சிறுவனுக்கு அறத்தைப் பற்றி ஆசிரியர் கூறியதில் கொஞ்சம் புரிந்தமாதிரி இருந்தது. புரியாதவற்றின் விளக்கத்தை, வார இறுதி நாட்களில் ஆலய மண்டபத்தில் நடைபெற்று வரும் அறநெறிப் பாடசாலையிற் பாடங்களை நடத்தும் ஆசிரியையிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதென எண்ணிக் கொண்டு, அன்றைய சமய பாடப்புத்தகத்தை வகுப்பிற் திறந்து படிப்பதற்கு ஆயத்தமானான்.

அதன் முற்பக்கத்தில், கலியுகத்தின் அவதார புருஷரான ஸ்ரீ சத்திய சாயி பாபா ஆசீர்வதிக்கும் கோலத்தில், அழகிய வண்ணப் படமாக புன்முறுவல் பூத்தபடி இருந்தார். அதன் கீழே அறம் என்பதன் விளக்கத்தின் சாரமாக, சத்தியம்,தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற சொற்கள் தெளிவாக அச்சில் மிளிர்ந்து கொண்டிருந்தன. நன்றி - (கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் அறநெறிப் பாடசாலை 10வது ஆண்டு மலர்)

❋❋❋ ❋❋❋ ❋❋❋



## கண்களை ஏன் மூடினார்?

கிருஷ்ண அவதாரத்தில் அரக்கி பூதனைக்கு மோட்சம் கொடுத்தார். தனது மார்பகத்தில் விஷத்தைத் தடவிக் கொண்டாள் அரக்கி. பகவான் அவளிடம் குழந்தை வடிவில் பாலைக் குடிக்கிறார்.

அப்போது ஸ்ரீ கிருஷ்ணன் கண்களை மூடிக் கொண்டிருந்தார்.

ஏன் கண்களை மூடிக்கொண்டிருந்தாராம்?

1. அவள் மனதில் ஒன்று வைத்துக் கொண்டு வெளியில் நல்லவள்போல வேஷம் போட்டாளே! அந்த வஞ்சகியைப் பார்க்க விரும்பவில்லை.

2. தான் கண்களைத் திறந்து கொண்டிருந்தால் தம்முடைய கருணா கடாட்சம் அவள் மீது பட்டிருக்கும். பிறகு அவளைக் கொல்ல முடியாதே?

3. பாலை நான் சாப்பிடுகிறேன்; விஷத்தை நீங்கள் சாப்பிடுங்கள் என்று கண்களை மூடி சிவனை வேண்டிக் கொண்டார்.

4. ராமாவதாரத்தின் போது தான் முதன் முதலில் ஒரு பெண்ணைக் கொன்றோம். இந்த அவதாரத்திலும் முதன் முதலில் பெண்ணா என்று வெட்கப்பட்டுக் கண்களை மூடினார்.

உபன்யாசகர் ஜெயராமசர்மாவின் சொற்பொழிவிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாலக்ஷ்மி

அ. யுவனா அவர்கள்
யா/இராமநாதன் கல்லூா

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்றார் திருவள்ளுவர். எல்லோரும் வீடு வாசலை விட்டு விட்டு ஆத்ம விசாரத்தில் ஈடுபடமுடியாது. உலக வாழ்க் கையை நடத்துவதானால் பணம் வேண்டித்தான் இருக்கிறது. இப்படிச் சம்பாதித்து குடும்பம் நடத்துபவர்கள் இருப்பதனால் தான் வேறு சிலர் ஆத்ம விசாரம் செய்ய முடிகிறது. பொருள் தேடி வாழ்க்கை நடத்தும் கிருகஸ்தர்கள் தான் ஆத்ம விசாரத்தில் ஈடுபட்ட சந்நியாசிகளுக்கு பிச்சைஷ அளித்து அவர்களை ரக்ஷிக்கிறார்கள். கிருகஸ்தர்கள் இல்லாவிட்டால் பொருளைப்பற்றி நிர்விசாரமாக சந்நியாசிகள் என்று சிலர் ஞானம், பக்தி இவற்றிலேயே ஈடுபட்டிருக்க முடியுது. பொருள் என்பது பொருள் இல்லாதது. அர்த்தம் அனர்த்தம் என்று சொன்ன அதே ஆதி சங்கராசாரியாள். அதே பஜ கோவிந்தத்தில் பணப் பேராசை பிடித்து அலையாதே. ஆனால் உனக்கு உரிய கர்மத்தினால் நீ சம்பாதிக்கிற பொருளைக் கொண்டு நியாயமாக வாழ்ந்து உன்னையே உயர்த்திக் கொள் என்றார்.

**யல்லபஸே நிஜ கர்மோபாத்தம்**
**விததம் தேன விநோதய சித்தம்**

செல்வத்திற்கு அதி தேவதையாக இருக்கப்பட்டவள் மஹாலக்ஷ்மி அவளைப் பிரார்த்தித்தால் நமக்கு தர்ம நியாயமாக வேண்டிய சம்பத்தைத் தந்து அநுக்கிரகம் செய்வாள். ஞான வைராக்கியக்கிரந்தங்களை நிறையச் செய்த ஸ்ரீ ஆசாரியாள் தம்முடைய பரம காருண்யத்தால் விவகார தசையிலுள்ள லோக ஜனங்களை உத்தேசித்து அவர்கள் மஹாலக்ஷ்மியை எப்படிப் பிரார்த் திக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கிற மாதிரி, "கனகதாரா ஸ்தவம்" என்ற லக்ஷ்மீபரமான ஸ்தோத்திரத்தை நமக்கு அநுக்கிரகித்திருக்கிறார்.

இந்த கனகதாரா ஸ்தவம் உண்டானதற்கு ஒரு கதை உண்டு. ஆசாரியார் சந்நியாசம் வாங்கிக் கொள்வதற்கு முற்பட்ட கதை அது. அவர் பால தசையில் காலடியில் பிரம்மச்சாரியாக குருகுலவாசம் செய்து வீடு வீடாகப் போய் பிச்சைஷ வாங்கி வந்த சமயம், ஒரு துவாதசியன்று பரம தரித்தரன் ஒருவன் வீட்டுக்கு பிச்சைஷக்காகப் போனார். அவனங்கு போன போது உஞ்சவிருத்திப் பிராமணனாகிய வீட்டுக்காரன் வீட்டில் இல்லை. பத்தினி மட்டும் இருந்தாள். இவரைப் பார்த்த மாத்திரத்தில் "அடடா எப்படிப்பட்ட தேஜஸ்வியான பிரமச்சாரி இவருக்கு பிச்சைஷ போட்டால் சகல புண்ணியமும் உண்டாகும். என்று நினைத் தாள். ஆனால் பிச்சைஷ போடத்தான் வீட்டில் ஒரு மணி அரிசிகூட இல்லை. தேடித் தேடிப் பார்த்ததில் ஒரு புரையில் அழுகல் நெல்லிக்காய் ஒன்று அகப்பட்டது. துவாதசிப் பாரணைக்காக அவள் புருஷன் சேமித்து வைத்திருந்த நெல்லி, போயும் போயும் இதையா அந்தத் தெய்வக் குழந்தைக்குப் போடுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ரொம்பவும் மனசு குமுறி வேதனைப் பட்டாள். ஆனால் பவதி பிசஷாம் தேஷி என்று கேட்டுவிட்ட பிரம்மச்சாரியை வெறுமே திருப்பி அனுப்பக் கூடாதுமாக. நிற்கிற பால சங்கரரைப் பார்த்து சொல்ல முடியாத வெட்கத்தோடும், அழுகையோடும் திரும்ப உள்ளே வந்தாள். வந்தபிறகு ஐயோ இப்படிப்பட்ட தெய்வக் குழந்தைக்கு போடாமல் இருப்பதா என்று நினைத்து போனாள். இப்படி வாசலுக்கும் உள்ளுக்குமாக நடமாடி விட்டு கடைசியில் அழுகலோ, மட்டமோ நம்மிடம் இருப்பதைத் தானே நாம் கொடுக்க முடியும். ஒரு மாதிரி மனசைத் தேற்றிக் கொண்டு அந்த அழுகல் நெல்லிக்கனியை ஆசாரியாருக்குப் போட்டாள். பொருளில் தரித்திரமாக இருந்தாலும் அவளுடைய மனசு எத்தனை பெரியது என்பதையும், அவளுக்கு தன்னிடம் எத்தனை அன்பு பொங்குகிறது என்பதையும் ஆசாரியார் கண்டு கொண்டார். அவர் மனசு அவளுக்காக உருகிற்று. உடனே தான் அவளுக்காக மஹாலக்ஷ்மியை பிரார்த்தித்து கனகதாரா ஸ்தவம் பாடினார்.

*** *** ***

## பரிபூரண பக்தி பாவங்களைப் போக்கிவிடும்

பலரிடம் தெய்வீக சக்தி புலப்படாமல் அடங்கிக் கிடக்கும். அதைத் தூண்டி விடவேண்டும். சிலருக்கு திடீரென்று இந்த சக்தி தோன்றுவதும் உண்டு. எப்படி, யாரால், எந்த உருவத்தில் இந்தப் பொறி தூண்டி விடப்படுகிறது என்பதற்கு விளக்கம் தருவது சுலபம் அல்ல. சிலர், மகான்கள் கூறிய வழியைப் பின்பற்றாமல் அதைப் புறக்கணித்தும் நடந்து கொண்டிருக்கலாம்.

ஆனால் சமயம் நேரும் போது அவர்கள் அலக்ஷியப்படுத்திய அதே போதனை அவர்களுடைய உள்ளத்தில் ஒளியைத் தோற்றுவித்து அவர்கள் அதைப் பின்பற்றத் தொடங்கலாம். இதற்கு எடுத்துக்காட்டாகப் பல மகான்களைக் கூறலாம். அற்புதமான ராமாயண காவியத்தைக் வழங்கிய வால்மீகி அப்படிப்பட்ட ஒருவர்தான். திருமங்கையாழ்வார் ஒரே இரவில் தீவிர பக்தராக மாறியவர்.

இந்தியில் ராமாயணம் எழுதிய துளசிதாசர் ஆசைகளுக்கு அடிமையாகிக் கிடந்தவர். மற்றொரு கிராமத்தில் இருந்த மனைவியை அடைய நள்ளிரவில் அவர் ஆற்றைக் கடந்து சென்றார். ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு நீந்துவதாக அவர் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அதுவோ ஒரு பிணம். இவ்வளவு கஷ்டப்பட்டு என்னிடம் வந்திருக்கிறீர்களே இதில் ஓரளவு சிரத்தையுடன் கடவுளை நாட முயன்றிருந்தால் நல்ல பலன் கிடைத்திருக்குமே என்று அவருடைய மனைவி எடுத்துரைத்தாள். அந்த அறிவுரை அவருடைய போக்கையே மாற்றியது.

நாராயணீயத்தை இயற்றிய பட்டத்ரியின் வாழ்க்கையிலும் இதுபோல் திடீரென்று ஏற்பட்ட மாற்றம்தான் அற்புதமான அக்காவியம் உருவாகக் காரணமாக இருந்தது. பாவம் செய்யாதவர்கள் யாருமே இருக்க முடியாது. செய்துவிட்ட பாவத்துக்காக மனப்பூர்வமான வருத்தம் தெரிவித்து, மன்னிப்பு கோரினால் உடனே இறைவனால் அவர்கள் மன்னிக்கப்பட்டு உயர்கதி அடைவார்கள்.

நன்றி - ஞானபூமி - சுந்தர்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு விளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவரின் சிவபக்தி

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வேதாரணியத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பரஞ்சோதி முனிவர் வேதாகமப் பயிற்சியும் தமிழ் இலக்கியத் தேர்ச்சியும் திருமறைத் தோய்வும் கொண்டவர். பல தலங்களுக்கும் யாத்திரை செய்து முடிவில் மதுரைக்கு வந்து அங்கு சொக்கநாதப் பெருமானையும் அங்கையற்கண்ணி அம்மையையும் வணங்கி நின்றார். மதுரை மீனாட்சி அம்பாள் இவருடைய கனவிலே தோன்றி இறைவனுடைய திருவிளையாடல்கள் அனைத்தையும் புராணங்களாகப் பாடுமாறு திருவாய் மலர்ந்தருளினார். இத்திருவிளையாடல்கள் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருவாசகம், பெரியபுராணம் ஆகியவற்றில் இடம் பெற்றனவாயினும் இதனை ஒன்றாகச் சேர்த்து பாட வைப்பது அம்பிகையின் திருவருளாக அமைந்தது. இறைவனுடைய விளையாட்டெல்லாம் உயிர்கள் மேல் வைத்த கருணையால் நடைபெறுகின்றன. இறைவன் அன்பர்களுக்கு எளியவன். இதனாலேயே "எளிவந்த பிரான்" என்று பாடியுள்ளனர்.

பரஞ்சோதி முனிவர் சைவசித்தாந்தப் பயிற்சி மிக்கவர். செந்தமிழ் இலக்கிய இலக்கணங்களில் புலமை மிக்கவர். இறைபக்தியுடையவர். சுவை சொட்டச் சொட்டப் பாடும் ஆற்றலுடையவர். தனக்கு முன்பு எழுந்த புராணங்களாகிய பெரியபுராணம், கந்தபுராணம் ஆகியவற்றை நன்கு கற்றுத் தெளிந்தார். அதனால் திருவிளையாடற் புராணம் என்னும் இந்நூல் செந்தமிழ் நயமும், திருவருள் திறனும் கொண்டதாக விளங்குகிறது. இறைவனிடத்தில் இவனுக்கு இந்த உருக்கமான பக்தியை பல இடங்களில் காணலாம். சுருக்கமாகக் கூறினால் தெய்வீகக் கதைகளை பக்தி ஓவியம் ஆக்கி விட்டார் என்றே கூறலாம். தொட்ட இடமெல்லாம் இறையன்பே குழைந்து நிற்கக் காணலாம். கல் மனத்தையும் உருக்கும் கவித்திறன் இவருக்கென்றே அமைந்த தனிச் சிறப்பாகும்.

இறைவன் திருவிளையாடல்களை பாடுவதற்கு முன் வந்தார் எனினும் மதுரையின் சிறப்பை நோக்கியும் சக்திபீடம் என்ற பெருமையை உள்ளத்தில் கொண்டும் முதல் பாடலை "சக்தியாய்" என்றே தொடங்குகிறார். அது மாத்திரமன்றி நூற்பயன் கூறுமிடத்திலும் சிவ புண்ணியராய் நண்ணி வாழலாம் என்று முடிக்கிறார். அங்கயக்கண்ணி மீனாட்சி தன்னுடைய இரும்பு போன்ற மனத்தை குழையச் செய்து விட்டாள் என்றும் உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் கால்மாறி ஆடினார் என்றும் எடுத்துக் காட்டும் இடம் உருக்கமானவை. பரஞ்சோதியார் தென்முகக் கடவுளுக்குப் பாடிய வணக்கப் பாடல் இன்றுவரை எல்லோராலும் போற்றிப் படிக்கப்படுகிறது. நாட்டுச் சிறப்பிலே அருமையான ஓர் உவமையின் மூலம் சிவபக்தியை எடுத்துக்காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்புறு பக்தி வித்தி
ஆர்வநீர் பாய்ச்சும் தொண்டர்க்கு
இன்புறு வான ஈசன்
இன்னருள் விளையு மாபோல்
வன்புறு கருங்கால் மன்னர்
வைகலும் செவ்வீ நோக்கி
நன்புலம் முயன்று காக்க
விளைந்தன நறுந்தண் சாலி"

உழவர்கள் முயன்று காக்கும் நெற்பயிரின் விளைவு போல் பக்தர்களின் உருக்கமான பக்தியால் திருவருள் விளைவு ஏற்படுகிறது என்பது இப்பாடலின் பொருளாகும். நகரப் படலத்தில் இறைவனது திருவடிகள் மதுரை மாநகர வீதிகளில் பட்டு அவ்வீதிகளையே தூய்மை செய்தன என்றும் வளையல்களும், மாணிக்கமும், விறகு கட்டையும் கொண்டு திரிந்து விற்றார் என்பதால் அத்தெருக்கள் தவம் செய்த தெருக்கள் என்றும் காட்டுகிறார். சிவபெருமானையே நூலுக்கு காப்பியத் தலைவனாக அமைத்தது தனிச் சிறப்பைத் தருவதாகும்.

"தன்னிகர் உயர்ச்சி இல்லான்
காப்பியத் தலைவனாக
முன்னவர் மொழிந்த தேனோர்
தமக்கெலாம் முகம னன்றோ?
அன்னது தனதே யாகும்
அண்ணலே பாண்டி வேந்தாய்
இந்நகர்க் கரசன் ஆவான்
இக்கவிக்கு இறைவன் ஆவான்"

## திரு விளையாடற் புராணபடனம்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக புராணபடனம் இடம் பெறுவது வழக்கம். ஆண்டுதோறும் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவை படிக்கப் பட்டு பாடல்களின் பொருளும் எடுத்து உரைக்கப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். ஆலயத்தில் இடம் பெறும் ஆவணிமாத மகோற்சவத்திற்கு முன்பு புராணப் படிப்பு பூர்த்தியாகும். ஆலயத்தில் நித்திய பணிபுரியும் சிவத்திரு ஈஸ்வரதாஸ் ஐயா அவர்கள் இவற்றுக்கெல்லாம் தலைமை தாங்குவார். இந்த ஆண்டு 12.06.2006 திங்கட் கிழமை இடம் பெறும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசைத் தினத்தில் திருவிளையாடற் புராணம் ஆரம்பமாகி நடைபெற்றுவருவதை அம்பாள் அடியார்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org